Find us on facebook/tamilmirror Follow us on tamilmirror epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

TUESDAY, NOVEMBER 15, 2022

செவ்வாய்க்கிழமை 15, 2022 | ஒளி: 08 கதிர்: 143 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | FREE

## பற்றாக்குறை

**மொத்த வருமானம்: ரூ. 3,415 பில்லியன்**
**மொத்த செலவினம்: ரூ. 5,819 பில்லியன்**
**பற்றாகுறை : ரூ.2, 404 பில்லியன்**

நிவாரணங்களை எதிர்பார்ப்பதிலும் தலைகளை மாற்றும் சிந்தனையிலும்

# முறைமை மாற்ற வேண்டும்



■ பா. நிரோஸ்

இதுவரை காலமாக முன்வைக்கப்பட்ட வரவு-செலவு திட்டங்கள் அனைத்துமே மக்களுக்கு நிவாரணங்களை வழங்கும் பட்ஜெட்டாக அமைந்ததன் விளைவுகளையே இன்று நாம் அனுபவித்து வருகின்றோம். இந்த நிலைமை இனிமேலாவது மாற்றமடைய வேண்டும். அதேபோல் போராட்டங்களின் ஊடாக முகங்களை மாற்றும் அரசியல் கலாசாரத்தில் இருந்து விடுபட்டு முறைமையை மாற்றும் புதிய அரசியல் கலாசாரம் உருவாக்கப்பட வேண்டுமென ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



## ரணிலுக்கு எதிராக ரணில் குற்றச்சாட்டு

ஜனாதிபதியும் நிதி அமைச்சருமான ரணில் விக்கிரமசிங்க முன்வைத்துள்ள வரவு-செலவு திட்டத்தால், நாட்டின் பொருளாதாரம் மேலும் மோசமடையும் எனத் தெரிவிக்கும் தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுர குமார திஸாநாயக்க, ரணிலுக்கு எதிராக ரணிலே குற்றச்சாட்டுகளை வைத்துள்ளதாகவும் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



## பட்ஜெட்டில் பதில் இல்லை

■ பா.நிரோஸ்

ஜனாதிபதியும் நிதி அமைச்சருமான ரணில் விக்கிரமசிங்கவால் சமர்ப்பிக்கப்பட்ட வரவு செலவுத் திட்டத்தில் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு பதிலில்லை என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

## வரிகள் கூடவில்லை

■ பா.நிரோஸ்

ஜனாதிபதியும் நிதி அமைச்சருமான ரணில் விக்கிரமசிங்க முன்வைத்துள்ள வரவு -செலவு திட்டத்தின் ஊடாக, வரிகள் எவையும் அதிகரிக்கப்படவில்லை என அமைச்சர் ஹரின் பெர்னான்டோ தெரிவித்தார்.

பாராளுமன்ற கட்டடத் தொகுதியில் வைத்து ஊடகவியலாளர்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



## ஹிருணிகா உட்பட 5 பேர் கைதாகினர்

ஐக்கிய மக்கள் சக்தியின் மகளிர் அணியின் தேசிய அமைப்பாளர் ஹிருணிகா பிரேமச்சந்திர உள்ளிட்ட 15 பேர், கறுவாத் தோட்டம் பொலிஸாரால், நேற்று (14) கைது செய்யப்பட்டனர்.

தொடர்ச்சி P2



## 4 சுயாதீன எம்.பிக்கள் சஜித்துடன் சங்கமம்

■ பா. நிரோஸ்

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவில் கடந்த பொதுத் தேர்தலில் போட்டியிட்டு, தற்போது பாராளுமன்றத்தில் சுயாதீனமாக செயற்படும் அநுர பிரியதர்ஷன யாப்பா, சுதர்ஷினி பெர்னாண்டோ புள்ளே, சந்திம வீரக்கொடி, ஜயரத்ன ஹேரத் ஆகியோர் ஐக்கிய மக்கள் கூட்டமைப்பில் நேற்று (14) இணைந்தனர்.

தொடர்ச்சி P2

## சேட்டை விட்ட 14 பேர் கைது

பருத்தித்துறை பொலிஸாரின் அதிரடியான சுற்றிவளைப்பு நடவடிக்கையில் 14 பேர் நேற்று (14) கைது செய்யப்பட்டுள்ளனர்.

பருத்தித்துறை நகர் பகுதிகளில் பெண்களிடம் சேட்டைகளில் பலர் தொடர்ச்சியாக ஈடுபட்டுவருவதாக கிடைத்த முறைப்பாடுகளின் அடிப்படையில், திடீர் சுற்றிவளைப்பு நேற்று (14) மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன்போதே 14 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனத் தெரிவித்த பருத்தித்துறை பொலிஸார், கைது செய்யப்பட்டவர்களை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தனர்.



## கணிக்கக்கூடிய எதுவுமில்லை

■ பா.நிரோஸ்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்வைத்துள்ள வரவு செலவு திட்டத்தில் எதுவுமே இல்லை என தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## ஐயாவின் இல்லத்துக்கு அவசரமாக வாருங்கள்

### வடக்கு, கிழக்கு தமிழ் கட்சிகளுக்கு அழைப்பு

வடக்கு, கிழக்கில் சமஷ்டி அடிப்படையிலான அதிகாரப் பகிர்வே தமிழ் தேசிய பிரச்சினைக்கான தீர்வு என்பதை, வடக்கு, கிழக்கு தமிழ் மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகள் ஒன்றாக வலியுறுத்த வேண்டிய சந்தர்ப்பமொன்று எழுந்துள்ளது என்பதை சுட்டிக்காட்டும் தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினரும் ஊடகப்பேச்சாளருமான எம்.ஏ. சுமந்திரன், இது குறித்த கலந்துரையாடல் ஒன்றுக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

தொடர்ச்சி P2

## சர்வதேச புலம்பெயர்ந்தோர் அமைப்பால் 303 அகதிகளுக்கும் மனிதாபிமான உதவிகள்

இலங்கையில் இருந்து அகதிகளாக கனடாவுக்கு செல்ல முற்பட்ட வேளையில் வியட்நாம் கடற்பரப்பில் வைத்து மீட்கப்பட்ட இலங்கையர்களுக்கு சர்வதேச புலம்பெயர்ந்தோர் அமைப்பு, 303 அகதிகளுக்கும் மனிதாபிமான உதவிகளை வழங்கி வருகிறது.

சர்வதேச புலம்பெயர்ந்தோர் அமைப்பு நேற்று (14) வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது. அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

தொடர்ச்சி P2

## விலை திருத்தத்தால் அரசாங்கத்துக்கு இலாபம்

சமீபத்தில் இடம்பெற்ற எரிபொருள் விலை திருத்தத்தின் மூலம், அனைத்து பெற்றோலியப் பொருட்களிலும் அரசாங்கம் இலாபம் அடைவதாக மின்சக்தி மற்றும் வலுச்சக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



## நிலைவரம்பற்ற சமூக சபை உருவாக்கப்பட வேண்டும்

### மனோ எம்.பி தெரிவிப்பு

■ மஹேஸ்வரி விஜயனந்தன்

மலையக தமிழ் மக்கள் இலங்கையில் நான்காவது பிரதான தேசிய இனமாக எங்களால் அடையாளப்படுத்தப்படுகின்றனர் எனத் தெரிவித்த தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன், நிலைவரம்பற்ற சமூக சபையையும் உருவாக்க வேண்டும் என விரும்புகின்றோம். இவை எமது புதிய அரசியலமைப்பு பேரவைக்கான பரிந்துரைகளாக இருக்கும் எனத் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

எமது காணிகளை

## தாரைவார்க்க இடமளியோம்

வடக்கு மாகாண ஆளுநர் தலைமையில் அவரின் செயலகத்தில் காணிகளைச் சுவீகரிக்கும் நோக்கத்துடன் அந்தக் காணிகளைப் படையினருக்கு வழங்கும் திட்டத்துடன் கூட்டம் நடைபெறுமாக இருந்தால் அதற்கு நாங்கள் ஒருபோதும் இடமளிக்கமாட்டோம் என இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா தெரிவித்தார்.

வடக்கு மாகாணத்தில் அபகரிக்கப்பட்ட காணிகளை விடுவிக்கும்படியே நாங்கள் கோரி வருகின்றோம். நல்லாட்சியில் எமது கோரிக்கையின் பிரகாரம் வடக்கில் ஏராளமான காணிகள் விடுவிக்கப்பட்டன. அதேபோல் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான இந்த ஆட்சியிலும் காணிகள் விடுவிக்கப்பட வேண்டும் என்றே கோருகின்றோம்.

தொடர்ச்சி P2

## வருட இறுதியில் சா/த பெறுபேறுகள்

### ஜனவரியில் உ/த பரீட்சைகள்

கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை பெறுபேறுகள் இந்த வருடத்தின் இறுதிக்குள் வெளியிடப்படும் என பரீட்சைகள் ஆணையாளர் எல்.எம். டி தர்மசேன தெரிவித்தார்.

அதேபோல் கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சைகள் அடுத்த ஆண்டு ஜனவரி 23ஆம் திகதி ஆரம்பித்து,

தொடர்ச்சி P2

## பட்ஜெட்டை செவிமடுத்த 500 இளைஞர், யுவதிகள்



பாடசாலை மாணவர்கள் உள்ளிட்ட சுமார் 500 இளைஞர், யுவதிகள் ஜனாதிபதியும் நிதி அமைச்சருமான ரணில் விக்கிரமசிங்க முன்வைத்த வரவு-செலவுத் திட்ட உரையை செவிமடுத்தனர்.

“பாராளுமன்ற வரலாற்றில் வரவு-செலவுத் திட்டம் சமர்ப்பிக்கும் போது இவ்வாறு பாடசாலை மாணவர்கள் உள்ளிட்ட இளைஞர்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டது இதுவே முதல் தடவையாகும்” என படைக்கல சேவிதர் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

## முறைமை மாற்றம் வேண்டும்

இங்கு இன்னுமொரு விடயத்தை நான் வலியுறுத்த விரும்புகிறேன். நாம் கொண்டு வருகின்ற பொருளாதார மறுசீரமைப்பு சர்வதேச நாணய நிதியத்துடன் உடன்பாட்டுக்கு வந்த மறுசீரமைப்புக்கு வரையறுக்கப்பட்டதாக இருக்கப்போவதில்லை. சர்வதேச நாணய நிதியம் முன்மொழிந்த பொருளாதார மறுசீரமைப்பு பொருளாதார ஸ்திரத்தன்மைக்கு மாத்திரம் வரையறுக்கப்படுகின்றது என்றார்.

2023ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தின் இரண்டாவது மதிப்பீட்டுக்கான ஆரம்ப உரையை ஜனாதிபதியும், நிதி பொருளாதார நிலைப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சருமான ரணில் விக்ரமசிங்க நேற்று (14) பாராளுமன்றத்தில் முன்வைத்தார்.

முழுச் செய்தி P3

## ரணிலுக்கு எதிராக ரணில் குற்றச்சாட்டு

வரவு- செலவு திட்டம் தொடர்பில் பாராளுமன்ற வளாகத்தில் வைத்து ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

40 வருடங்கள் பாராளுமன்றத்தில் இருக்கும் ரணில் விக்கிரமசிங்க 6 முறை பிரதமராகவும், 4 அரசாங்கங்களிலும் இருந்திருக்கிறார். எனவே நாட்டின் பொருளாதார நெருக்கடிக்கு ரணிலும் பொறுப்புக்கூற வேண்டியவர். பொருளாதாரம் பயணிக்கும் பாதையை மாற்றியமைக்க வேண்டுமென ரணில் கூறுகிறார். பொருளாதாரப் பயணத்தை மாற்றுவதற்காக வரி அதிகரிப்பு, விற்பனை செய்வது, கடனை பெறுவதே ரணிலின் திட்டமாக இருக்கிறது என்றார்.

அடுத்த வருடத்தில் 1.5 ட்ரில்லியன் வரிகளை பெற்றுக்கொள்ள அரசாங்கம் எதிர்பார்க்கிறது. இதனால் மக்கள் மேலும் நெருக்கடிகளுக்கு முகங்கொடுப்பார்கள். அதேபோல், நட்டமடையும் நிறுவனங்களுக்குப் பதிலாக இலாபமடையும் நிறுவனங்களையும் ஜனாதிபதி விற்பனை செய்யப்பார்க்கிறார். அதேபோல் அடுத்த வருடமும் அதிகளவான கடனைப் பெற்றுக்கொள்ளப் பார்க்கிறார் என்றார்.

## பட்ஜெட்டில் பதில் இல்லை

ஜனாதிபதியினால் சமர்ப்பிக்கப்பட்ட வரவு செலவுத் திட்டம் தொடர்பில் பாராளுமன்ற கட்டிட வளாகத்தில் வைத்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே எதிர்க்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வரவு செலவுத் திட்டத்தின் ஊடாக மக்களுக்கு நிவாரணங்கள் கிடைக்கும் என மக்கள் எதிர்பார்த்தார்கள். ஆனால் மக்களுக்கு எந்தவிதமான நிவாரணங்களையும் வரவு செலவு திட்டத்தில் அறிவிக்கப்படவில்லை எனவும் கூறினார்.

## வரிகள் கூடவில்லை

வரவு-செலவு திட்டத்தின் ஊடாக எந்தவிதமான வரிகளும் அதிகரிக்கப்படவில்லை. ஆனால், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நீண்டகால திட்டங்களையே முன்வைத்துள்ளார். மூன்று மாதங்களுக்க முன்னர் நாடு எப்படி இருந்தது? எரிபொருள், எரிவாயுவை பெற்றுக்கொள்ள காணப்பட்ட வரிசைகள் இப்போது இருக்கின்றனவா? எனவே மக்கள் இதனைப் புரிந்துகொள்வார்கள் என்றார்.

நாடு என்கிற வகையில் சவாலே காணப்படுகிறது. இதனை வெற்றிக்கொள்ள வேண்டும். அனைத்துக்கும் வீதிக்கு இறங்கி போராடுவதற்குப் பதிலாக சரியான காரணங்களுக்காகவே வீதிக்கு இறங்கி போராட வேண்டும். குறிப்பாக சுற்றுலாப் பயணிகள் வருகையை தடுக்கும் வகையில் வீதிக்கு இறங்கிப் போராட கூடாது என்றார். நாட்டுக்கான கொள்கைகளை வகுப்பதற்கான நீண்டகால திட்டங்களையே ஜனாதிபதி முன்வைத்துள்ளார் என்றார்.

## கணிக்கக்கூடிய எதுவுமில்லை

அதிகரிக்கப்பட வேண்டிய வரிகளை ஜனாதிபதி ஏற்கனவே அதிகரித்துவிட்டார். விசேடமாக எதுவும் இல்லை. பொருளாதார சவால்களுக்கு நாடு எவ்வாறு முகங்கொடுக்க வேண்டுமென்கிற திட்டங்களையே ஜனாதிபதி முன்வைத்துள்ளார். வரவு செலவு திட்டமென்று இதில் கணிக்கக்கூடிய எதுவும் இல்லை.

## தாரைவார்க்க இடமளியோம்

வடக்கில் ஆளுநர் காணிகளைச் சுவீகரித்துப் படையினருக்குத் தாரைவார்க்க நாங்கள் ஒருபோதும் இடமளிக்கமாட்டோம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## ஹிருணிகா உட்பட 5 பேர் கைதாகினர்

ஐக்கிய நாடுகளின் கொழும்பு அலுவலகத்துக்கு முன்னால், பெண்களின் உரிமைக்காக நடந்த போராட்டத்தின் போது, பெண்ணொருவர் கைது செய்யப்பட்டிருந்தார். அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து, ஹிருணிகா பிரேமச்சந்திர உள்ளிட்டோர் கறுவாத் தோட்டம் பொலிஸ் நிலையத்துக்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட போதே கைது செய்யப்பட்டனர்.

## 4 சுயாதீன எம்.பிக்கள் சஜித்துடன் சங்கமம்

எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாசவுடன் பாராளுமன்ற கட்டடத்தொகுதியில் நேற்று (14) காலை இடம்பெற்ற கலந்துரையாடலின் பின்னர் அவர்கள் ஐக்கிய மக்கள் கூட்டமைப்பில் இணைந்துள்ளனர்.

நீண்டகாலமாக நடத்தப்பட்ட பல கலந்துரையாடல்களின் பிரதிபலனாக இவ்வாறு ஒன்றிணைந்துள்ளதாகவும், எதிர்காலத்தில் பலமான சக்தியாக ஐக்கிய மக்கள் கூட்டணியைக் கட்டியெழுப்புவதற்கு பங்களிப்பதாகவும் சஜித்துடன் இணைத்துக்கொண்ட அனுர பிரியதர்ஷன யாப்பா தெரிவித்தார்.

மேலும் பலரை எதிர்காலத்தில் இணைத்துக்கொண்டு கூட்டணியை பலப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

## ஐயாவின் இல்லத்துக்கு அவசரமாக வாருங்கள்

எமது கட்சிகளுக்கிடையில் பல்வேறு பேதங்கள் இருந்தாலும் எமது மக்களின் அடிப்படை அபிலாஷையை வெளிப்படுத்த வேண்டிய இந்த வேளையில் கட்சி வேறுபாடுகளை புறம் வைத்து விட்டு அதனை உரத்துக் கூற அனைவரும் ஒன்றிணைய வேண்டிய தருணம் இதுவாகம்.

இதற்காக இன்று (15) மாலை 5.30 மணிக்கு தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் அவர்களின் இல்லத்தில் ஒன்று கூடுமாறு கட்சித் தலைவர்களாகிய உங்களை அன்போடு அழைக்கிறோம். காலத்தின் தேவையை கருத்தில் கொண்டு நீங்கள் வருவீர்கள் என்று நம்புகிறோம் என அவர் கட்சிகளுக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

## வருட இறுதியில் சா/த பெறுபேறுகள்

பெப்ரவரி 17ஆம் திகதி முடிவடையும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

பரீட்சைகள் திணைக்களத்தில் நேற்று (14) இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கருத்துரைத்த அவர்,

பரீட்சைகள் திணைக்களத்தின் கொடுப்பனவுகள் தொடர்பிலான முழுமையான மீளாய்வுக்கு குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாகவும், கடந்த 2019 ஆம் ஆண்டு முதல் நடத்தப்படாமலிருந்த தகவல் தொழிநுட்பத்துக்கான பரீட்சையை மீண்டும் நடத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என அவர் தெரிவித்தார்.

கல்விப் பொதுத் தராதர உயர்தரப்பரீட்சைகள் அடுத்த ஆண்டு ஜனவரி 23 ஆம் திகதி ஆரம்பித்து பெப்ரவரி 17ஆம் திகதி முடியும். பரீட்சைகளை பிற்போடுமாறு பல்வேறு கோரிக்கைகள் விடுக்கப்பட்ட நிலையில் இதனை பிற்போட்டுளோம். எனவே, மாணவர்கள் தம்மை தயார்ப்படுத்திக்கொள்ள முடியும் என்றார்.

## விலைத் திருத்தத்தால் அரசாங்கத்துக்கு இலாபம்

கடந்த வெள்ளிக்கிழமை அமல்படுத்தப்பட்ட திருத்தத்துக்கு அமைய ஒரு லீற்றர் ஒட்டோ டீசலின் விலை 15 ரூபாயாலும் ஒரு லீற்றர் மண்ணெண்ணெயின் விலை 25 ரூபாயாலும் அதிகரிக்கப்பட்டது. அதற்கிணங்க, அந்த விலைத்திருத்தத்தின் பின்னரான எரிபொருள் இறக்குமதிக்கான செலவு முறிவுகளை அமைச்சர் வெளிப்படுத்தியுள்ளார்.

ஒரு லீற்றர் 92 ரக பெற்றோலின் மூலம் 22.71 ரூபாய் இலாபத்தையும் ஒரு லீற்றர் 95 ரக பெற்றோலின் மூலம் 126.49 ரூபாய் இலாபத்தையும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் பெறுகிறது.

மேலும், ஒரு லீற்றர் ஒட்டோ டீசலை விற்பனை செய்வதன் மூலம் 0.89 ரூபாய் இலாபத்தையும் ஒரு லீற்றர் சுப்பர் டீசலின் மூலம் 36.50 ரூபாயையும் கூட்டுத்தாபனம் இலாபமாகப் பெறுகிறது.

ஒரு லீற்றர் மண்ணெண்ணெயக்கான செலவு 362.90 ரூபாய் என்று தெரிவித்துள்ள அமைச்சர், 365 ரூபாயாக விற்பனை செய்வதன் மூலம், 2.10 ரூபாய் இலாபத்தை பெற்றுக் கொள்வதாக சுட்டிக்காட்டியுள்ளார்.

## 303 அகதிகளுக்கும் மனிதாபிமான உதவிகள்

ஹனோயில் உள்ள இலங்கை தூதரகத்திடம் இருந்து முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைய, வியட்நாம் மற்றும் இலங்கை அரசாங்கங்களின் ஒருங்கிணைப்புடன், வியட்நாம் மற்றும் இலங்கையில் உள்ள சர்வதேச புலம்பெயர்ந்தோர் அமைப்பு தூதரகங்கள் மற்றும் இதனுடன் தொடர்புடைய ஐ.நா முகமைகள், ஏற்றுக்கொண்ட உள்நாட்டு மற்றும் சர்வதேச தரநிலைகள் மற்றும் சட்டங்களுக்கு அமைய பாதிக்கப்பட்டவர்களுக்கு தேவையான உதவிகளையும், பாதுகாப்பையும் வழங்கிவருவதாக தெரிவித்துள்ளது.

மேலும், வியட்நாமிலுள்ள முகாம் ஒன்றில் தங்க வைக்கப்பட்டுள்ள இலங்கையர்கள் தாமாக முன்வந்து இலங்கைக்குச் செல்ல விருப்பம் தெரிவித்தால் அதற்கான உதவிகளை வழங்கவும் தயாராக இருப்பதாக அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

## பட்ஜெட்டை செவிமடுத்த 500 இளைஞர், யுவதிகள்

மேல்மாகாண பாடசாலைகள் சிலவற்றின் மாணவர் தலைவர்கள் உள்ளிட்ட சிரேஷ்ட மாணவ மாணவியர், தேசிய இளைஞர் பேரவையின் இளைஞர் பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் சுமார் 100 இளைஞர் யுவதிகள் இதில் அடங்குகின்றனர்.

அதற்கு மேலதிகமாக இளைஞர் படையணியை பிரதிநிதித்துவப்படுத்தும் இளைஞர்கள் சிலரும் வரவு-செலவுத்திட்ட உரையை செவிமடுக்க வந்திருந்தனர்.

வரவு– செலவுத்திட்டம்

## வெறும் வாக்குறுதியாக அமைந்துவிடக்கூடாது

### ஐந்தாண்டுகால வேலைத்திட்டமொன்று அவசியம் என்கின்றனர் நிபுணர்கள்

■ ஆர்.யசி

மக்களை ஏமாற்றும் வாக்குறுதிகளுடன் இம்முறை வரவு- செலவு திட்டமும் அமைந்துவிடக்கூடாது. மாறாக அடுத்த ஐந்து ஆண்டுகால பொருளாதார திட்டமொன்றை முன்வைத்து பொருளாதார ஸ்திரத்தன்மையை உறுதிப்படுத்தும் வரவு-செலவு திட்டமாக இருக்க வேண்டும் என கொழும்பு பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் பிரியங்க துனுசிங்க உள்ளிட்ட பொருளாதார நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.

ஆட்சிக்கு யார் வந்தாலும் நிலையான பொருளாதார கொள்கையொன்றை உருவாக்கும் வேலைத்திட்டங்களை முன்னெடுக்க வேண்டும். தேசிய உற்பத்தியை பலப்படுத்தி, வருவாயை கூட்டும் நீண்டகால பொருளாதார கொள்கைத்திட்டம் ஒன்றினை உருவாக்கினால் மட்டுமே தீர்வுகள் குறித்து சிந்திக்க முடியும். ஐந்து ஆண்டுகால பொருளாதார திட்டமொன்றை உருவாக்கி தேசிய உற்பத்தியாளர்கள், விவசாயிகள், வியாபாரிகளிடம் முன்வைக்க வேண்டும். வெறுமனே வாக்குறுதிகளை கொடுக்கும் வரவு -செலவு திட்டமாக இதுவும் அமைந்துவிடக்கூடாது.

> இவ்வாறு கஷ்டப்படும் மக்களிடம் வரிகளை அறவிட்டு ஒரு சிறிய வர்க்கத்தின் நலன்களை கருத்தில்கொள்ளக்கூடாது

வரிகளை உயர்த்தவேண்டிய கட்டாயம் உள்ளது. ஆனால் மக்கள் மிகவும் கடினமான வாழ்க்கையை வாழ்ந்துகொண்டுள்ள இந்த நிலையில் இவ்வாறான வரி அதிகரிப்புகளை மேற்கொண்டுள்ளமை சமூகத்தில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. இவ்வாறு கஷ்டப்படும் மக்களிடம் வரிகளை அறவிட்டு ஒரு சிறிய வர்க்கத்தின் நலன்களை கருத்தில்கொள்ளக்கூடாது. அதேபோல் இவ்வாறான நேரத்தில் மீண்டும் அமைச்சரவை எண்ணிக்கையை அதிகரிக்க தேவையில்லை. அமைச்சரவை அதிகரிப்பானது நாட்டுக்கு மேலும் சுமையேயாகும். அதேபோல் இம்முறை வரவு-செலவு திட்டத்தில் தேசிய பாதுகாப்புக்கான செலவீனங்களை கட்டுப்படுத்தியாக வேண்டும்.

மேலும், சர்வதேச நாணய நிதியம் கூறுவதற்காக இங்கு அனைத்தும் முன்னெடுக்கப்படுகின்றது என தெரிவிக்க முடியாது. அவர்கள் வரவு - செலவுக்கு இடையிலான இடைவெளியை முறையாக கையாள வேண்டும் என்பதை தெரிவிப்பார்கள். அத்துடன் ஓர் இலக்கை அவர்கள் எமக்கு முன்வைப்பார்கள். குறித்த கால எல்லைக்கான இலக்கு என்ன என்பதையும் பரிந்துரைப்பார்கள். அதற்கான வேலைத்திட்டம் என்ன என்பதை நாமே முன்வைக்க வேண்டும். இதில் எடுக்க வேண்டிய தீர்மானங்கள் எம்மை சார்ந்தது எனவும் நிபுணர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

## நிலைவரம்பற்ற சமூக சபை உருவாக்கப்பட வேண்டும்

வெள்ளவத்தை- குளோபல் ஹோட்டலில், கண்டி சமூக அபிவிருத்தி நிறுவனம் நேற்று முன்தினம் (13) ஏற்பாடு செய்திருந்த மலையக தேசிய இனத்தின் அரசியல் கோரிக்கைகள் தொடர்பான கலந்துரையாடலில் கலந்துகொண்டு கருத்துரைத்த போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர், ஒட்டுமொத்த மலையகத் தமிழர்களும் பெருந்தோட்டத் தொழிலாளர்கள் அல்லர். ஆனால் பெருந்தோட்டத்தொழிலாளர்கள் பெரும்பாலும் மலையகத் தமிழர்களாக இருக்கின்றனர்.

பெருந்தோட்ட மக்கள் மத்தியில் தான் இன்று அதிகமான உணவின்மை என்ற விடயமும் வறுமையும் நிலவுவதாக உலக வங்கியும், ஐ.நாவும் தெரிவித்திருக்கின்றன. இதை கண்டும் காணாதது போல கேட்டும் கேட்காதது போல இலங்கை அரசாங்கமும் இருந்துகொண்டிருக்கின்றது என்பதை மறு ஒளிபரப்பு செய்து நாங்கள் தெளிவாகக் கூறுகின்றோம் என்றார்.

அதிகாரப் பகிர்வு என்பது வடக்கு, கிழக்குக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டதாக இருக்க கூடாது. அது தென்னிலங்கை, மலையகத்தில் பிரதானமாக வாழக்கூடிய மலையகத் தமிழர்களுக்கும் வந்து சேர வேண்டும் என கோருகின்றோம்.

ஜனாதிபதி ரணில் புதிய அரசிலமைப்பு பற்றி பேசுகிறார். அதற்கான மக்கள் ஆணை அவருக்கு இருக்கிறதா? இல்லையா என்பது குறித்து எமக்கு கவலை இல்லை.

எம்மை பொறுத்தவரை இடைக்கால ஜனாதிபதியாக இருந்தாலும் சரி, ஓடிப்போன ஜனாதிபதியாக இருந்தாலும் சரி இனிமேல் ஜனாதிபதியாகும் கனவுடன் இருப்பவர்களும் சரி தேசிய பிரச்சினையை தீர்க்க வேண்டும் என்பது தொடர்பில் அனைவருக்கும் எதிர்பார்ப்பு உள்ளது. புதிய அரசிலமைப்பு வரவேண்டும். அதனூடாக தேசிய பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும். அதற்குள் முக்கியமாக மலையக தமிழர்களின் பிரச்சினையும் உள்வாங்கப்பட வேண்டும் என்பதில் நாங்கள் தெளிவாக இருக்கின்றோம் என்றார்.



# ஒரே பார்வையில் 2023 பட்ஜெட்

நிதியமைச்சரான ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்றத்தில் நேற்று (14) சமர்ப்பித்த 2023 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட (பட்ஜெட்) முன்மொழிவுகளை ஒரே பார்வையில் தருகின்றோம்.

## திரடி அறிவிப்பு

■அரசாங்க வைத்தியசாலைகளில் கட்டணம் செலுத்துகின்ற விடுதிகள் மீள நடைமுறை

■விசேட வகை தவிர்ந்த ஆயுதப்படை ஆளணியை 18 வருட சேவையின் பின் ஓய்வுக்கு அனுமதித்தல்

■சில விலக்களிப்புகளை நீக்க 2023 ஏப்ரல் 01 முதல், பெறுமதி சேர் வரிச் சட்டத்திற்கான திருத்தம்

■சமூர்த்தி, முதியோர், அங்கவீனர் மற்றும் சிறுநீரக பயனாளிகளின் கொடுப்பனவுகளை அதிகரித்தல்

■சிறுவர் போஷாக்கினை மேம்படுத்த மேலதிக ஊட்டச்சத்து நிகழ்ச்சி திட்டங்களை மேலும் வலுவூட்டுவதற்கு 500 மில்லியன் ரூபாய்

■பொருளாதார மீட்சி காரணமாக சுமார் ஒரு வருடத்தில் அரசாங்க வருவாய் அதிகரிக்குமென எதிர்பார்ப்பதால் அரசாங்க ஊழியர, ஓய்வூதியம் பெறுவோருக்கு நிவாரணம்

■சர்வதேச வர்த்தகத்தை மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 100 % ஆக அதிகரிப்பதற்கான நடவடிக்கை

■ஒவ்வொரு 18 வயதுக்கு மேற்பட்டவரும் வரிக் கோவையொன்றினை ஆரம்பிப்பது முதற்படியொன்றாக இருக்கின்ற அதேவேளை கோவைகளை ஆரம்பித்தவர்களில் பலர் வரியற்ற அடிப்படை அளவுக்கு கீழே இருப்பர்

■வெளிநாட்டு மூலங்கள் மற்றும் அரசாங்கத்தின் உதவியைக் கொண்டு சமய தளங்களுக்கான சூரிய சக்தி பெனல்களை வழங்குவதற்கு நடவடிக்கை



## இளைஞர் நலன்கள்

■இளம் பெண் தொழில்முயற்சியாளர்களை ஊக்குவிக்க சலுகைக் கடன் திட்டம்

■வெளிநாட்டு வேலைவாய்ப்புக்காக இளைஞர்களை பயிற்றுவித்தல்

■நாட்டின் உணவுப் பாதுகாப்பை உறுதிசெய்வதில் விவசாய தொழிற்றுறையில் இளம் சமுதாயத்தை தக்கவைத்தல்

## இலக்குகளும் எதிர்பார்ப்பும்

■7-8 சதவீத பொருளாதார வளர்ச்சி

■சர்வதேச வர்த்தகத்தை மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 100 சதவீதமாக அதிகரித்தல்.

■2023-2032 வரை புதிய ஏற்றுமதி ஊடாக ஐ. அ.டொலர் 3 பில்லியன் வருடாந்தம் அதிகரிப்பு

■10 வருடங்கள் முழுவதும் வருடாந்தம் ஐ. அ.டொலர் 3 பில்லியன் நேரடி வெளிநாட்டு முதலீடு

■எதிர்வரும் 10 ஆண்டுகளினுள் உயர்தேர்ச்சிபெற்ற சர்வதேசளவில் போட்டிமிக்க தொழிற்படையை உருவாக்குதல்

■8.3 சதவீதமாக இருக்கும் மொத்த உள்நாட்டு உற்பத்தியை 2025 இல் ஏறத்தாள 15 சதவீதமாக அதிகரித்தல்

## சுகாதார கரிசனை

■குடிநீர்ப் போத்தல்களைப் பயன்படுத்துவது சடுதியாக அதிகரித்ததனால் குடிநீர் போத்தல் பாதுகாப்பு முத்திரைகளை (Sticker) அறிமுகப்படுத்தல்

■சிறைக்கைதிகளுக்கான சுகாதாரத்தை மேம்படுத்துவதற்கு போதுமான வசதிகளை புதிதாக உருவாக்கல்

■பதுளை, குருநாகல், பொலன்னறுவை ஆகிய வைத்தியசாலைகளை போதனா வைத்தியசாலைகளாக தரமுயர்த்தல்

## ஒதுக்கீடுகள்

■ஏற்றுமதி மற்றும் முதலீட்டு ஊக்குவிப்புக்கான விசேட நிறுவனமொன்றினை தாபிக்க 100 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு

■பொருளாதார வலயங்களை உருவாக்குவதற்கு 300 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு

■தேசிய உற்பத்தித்திறன் ஆணைக்குழுவைத் தாபிக்க 100 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு

■காலநிலை மாற்றங்கள் தொடர்பில் சர்வதேச பல்கலைக்கழகத்தை அமைக்க 100 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு

■ஆரோக்கியமான வியாபார சூழலொன்றினை உருவாக்குவதற்கு தேவையான மறுசீரமைப்புகளை அறிமுகப்படுத்த 200 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு

■கறுவா தொழிற்றுறைக்கான புதிய திணைக்களத்தை தாபிக்க 200 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு

■கிழக்கு மாகாணம், தெற்கு மற்றும் மேல் மாகாணங்களில் கடல்சார் சுற்றுலாத்துறையை ஊக்குவிக்க 50 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு

■139 மாகாணப் பாடசாலைகளும் 23 தேசிய பாடசலைகளையும் போன்று மிகக் குறைந்த வசதிகளைக் கொண்ட கிராமியப் பாடசாலைகளின் வசதிகளை மேம்படுத்த 200 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு

■வைத்தியர்களுக்கான பட்டப் பின்படிப்பு நிறுவனங்களை தாபிக்க 60 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு

■பல்கலைக்கழகங்களில் காணப்படும் பட்டப்படிப்பு கற்கைகளின் தரம் மற்றும் அங்கிகாரம் தொடர்பில் கண்டறிவதற்கு தர உத்தரவாத மற்றும் சான்றுப்படுத்தல் சபை 100 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு

■ஊவ வெல்லஸ்ஸ பல்கலைகழகத்தில் மருத்துவ பீடத்தினை நிறுவ 200 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு

■வரலாற்று ஆய்வு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு நிறுவனமொன்றினை நிறுவ 50 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு

■சகல அரச நிறுவனங்கள் மூலமும் இணையவழி மூலமாக கட்டண சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்கும் முறைமையொன்றினை தயாரிப்பதற்கும் 200 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு

■நன்னீர் மீன் உற்பத்திக்காக வசதிப்படுத்துவதன் கீழ் உள்நாட்டு மீன்பிடித் துறையினை செய்வதற்காக 100 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு

■10 விவசாய தொழில்முயற்சியாண்மைக் கிராமங்களை நிறுவுவதற்கு 250 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு

■மதுவரித் திணைக்களத்தின் கீழ் புதிய ஆய்வுகூடத்தினை நிறுவ 100 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு



## விவசாய மற்றும் வர்த்தக அபிவிருத்தி

■4 ஹெக்ரேயருக்கு குறைவான தென்னங் காணிகளை துண்டாக்குவதற்கு வரையறை மற்றும் சட்டத் திருத்தம்

■ஸ்ரீ லங்கன் எயாலைன்ஸ், ஸ்ரீ லங்கா டெலிகொம், கொழும்பு ஹில்டன், வோட்டேர்ஸ் எட்ஜ் மற்றும் அதன் துணைநிறுவனங்களுடன் சேர்த்து இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் என்பவற்றை உரிமமாற்றம் செய்தல்

■இரத்தினக்கல் மற்றும் ஆபரண ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகார சபையுடன் ஒன்றிணைக்கப்படும். தொழிற்றுறை பங்குபற்றுநர்களின் நன்மைக்காக இரத்தினக்கல் விற்பனை நிலையத்தை உருவாக்கல்

■கஞ்சாவை ஏற்றுமதிக்காக மாத்திரம் உற்பத்தி செய்வதற்கான ஆற்றல்களை தேடிப்பார்க்க நிபுணர் குழு

■வனப்பரம்பலினை அதிகரிப்பதற்கான சமுதாயப் பங்களிப்பு

■அறுவடைக்குப் பிந்திய இழப்புகளைக் குறைத்தலும் களஞ்சியப்படுத்தலை மேம்படுத்தலும்

## வரி விதிப்புகள் மற்றும் திருத்தங்கள்

■கடவுச்சீட்டு, வீசா மற்றும் ஏனைய அறவீடுகள் மீது குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்தினால் அறவிடப்படும் கட்டணங்களை 20 சதவீதத்தினால் அதிகரித்தல்

■பீடி தொழிற்றுறையினை ஒழுங்குபடுத்துவதற்கும் பீடி பாவனையிலிருந்து மக்களை தூரமாக்குவதற்கும், பீடி ஒன்றுக்கு 2 ரூபாவினை வரியாக விதித்தல்

■துணைத் தீர்வைகளை இல்லாதொழித்தல்

■2023 ஜனவரி 01 இலிருந்து தற்போது அறவிடப்படும் சுங்கத் தீர்வை வீதமான 0%, 10% மற்றும் 15% ஆகிய தீர்வை வீதங்களை 0%, 15% மற்றும் 20% ஆக திருத்தம்

■விவசாயத்தின் அடிப்படையில் கொண்ட பெறுமதி சேர்த்தல்களின் அடிப்படையிலான கைத்தொழிலாளர்களுக்கு தொடர்புடைய செஸ் வரிகளுக்கு தடைகள் இல்லாத விதத்தில் வரிக் கொள்கை

■அரசாங்க நிறுவனங்களினால் அறவிடப்படுகின்ற மற்றும் சேகரிக்கப்படுகின்ற உரிமத்தொகை, வாடகை மற்றும் ஏனைய வரியல்லா வருவாய்கள் பற்றி ஆராய்ந்து பொதுத் திறைசேரிக்கு பரிந்துரைகளை மேற்கொள்வதற்கு குழு

## முன்மொழிவுகள்

■ஏற்றுமதி அபிவிருத்திச் சபை, முதலீட்டுச் சபை, இலங்கை ஏற்றுமதி கடன் காப்புறுதி கூட்டுதாபனம், தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி அதிகார சபை போன்ற நிறுவனங்கள் அனைத்திற்கும் பதிலாக புதிய சட்டமொன்றினை உருவாக்கி ஏற்றுமதி மற்றும் முதலீட்டு ஊக்குவிப்புக்கான விசேட நிறுவனமொன்றினை தாபித்தல்

■வெளிநாட்டு முதலீட்டினை கவருவதற்காக தற்பொழுது இனம் காணப்பட்டுள்ள மேல் மாகாணம், அம்பாந்தோட்டை மற்றும் திருகோணமலை சூழலினை அண்டிய பொருளாதார வலயங்களை உருவாக்குதல்

■தேசிய உற்பத்தித்திறன் செயலகத்திற்குப் பதிலாக தேசிய உற்பத்தித்திறன் ஆணைக்குழுவினைத் தாபித்தல்

■உற்பத்தித்திறன் வாய்ந்த பொருளாதார நடவடிக்கைகளை வினைத்திறனுடன் கொண்டுநடாத்தும் விதத்தில் புதிய, இற்றைப்படுத்தப்பட்ட அத்துடன் ஒன்றுசேர்க்கப்பட்ட தொழிற்சட்டமொன்றை இயற்றுதல்

■டிஜிட்டல் தொழில்நுட்பத் துறையை மேலும் மேம்படுத்தத் தேவை பற்றி ஆராய்வதற்கும் அமைச்சரவைக்கு அறிக்கை சமர்ப்பிப்பதற்கும் தொழிற்றுறையிலுள்ள நிபுணர்களையும் தொடர்புடைய அலுவலர்களையும் ஈடுபடுத்தி குழுவொன்றினை நியமித்தல்

■கறுவா உற்பத்தி மற்றும் ஏற்றுமதியினை ஊக்குவிப்பதற்காக திணைக்களமொன்றினை கறுவாச் செய்கை அதிகளவு இடம்பெறுகின்ற கரந்தெனிய பிரதேசத்தில் தாபித்தல்

■பேராதனை, உருகுனை, யாழ்ப்பாணம் போன்ற பல்கலைக்கழகங்களில் வைத்தியர்களுக்கான பட்டப் பின்படிப்பு நிறுவனங்களை தாபித்தல்

■பல்கலைக்கழகங்களில் காணப்படும் பட்டப்படிப்பு கற்கைகளின் தரம் மற்றும் அங்கிகாரம் தொடர்பில் கண்டறிவதற்கு நிலைமை சான்றிதழ் மற்றும் தர உத்தரவாத மற்றும் அங்கிகார சபையினை தாபித்தல்

■வெளிநாட்டு பல்கலைக்கழங்களில் பட்டப்படிப்பை தொடர்வதற்கு 75 புலமைப்பரிசில்களை வழங்குவதற்கு நடவடிக்கை. இதற்காக ஏற்படும் செலவினம் ஜனாதிபதி நிதியத்தினால் மேற்கொள்ளப்படவேண்டும்

■ஊவ வெல்லஸ்ஸ பல்கலைகழகத்தில் மருத்துவ பீடத்தினை புதிதாக நிறுவுதல்

■இலங்கையின் வரலாறு தொடர்பில் ஆய்வு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு நிறுவனமொன்றினை நிறுவுதல்

■அரசாங்க சேவையின் அனைத்து விதமான நோக்கங்களையும் மீளாய்வு செய்வதுடன் தேவையான மறுசீரமைப்புகள் உள்ளடங்கலாக பரிந்துரைகளை வழங்குவதற்கும் ஜனாதிபதி ஆணைக்குழு ஒன்றினை நியமித்தல்

■வரி விதிப்பு தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவினை தாபித்தல்

■அரசாங்க சேவை நிறுவனங்களினூடாக சேவைகளை வழங்குகின்ற போது அனைத்து கொடுப்பனவுகளையும், இலத்திரனியல் ஊடாக மேற்கொள்வதை 2024.03.01 ஆந் திகதி தொடக்கம் கட்டாயமாக்குதல்

■தனியார்துறை ஊழியர்களுக்கு காப்புறுதி காப்பீடைப் பெற்றுக் கொடுத்தல் மற்றும் சுகாதார மருத்துவக் காப்புறுதியினைப் பெற்றுக் கொடுத்தல்

■நுண்நிதி, கொடுகடன் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையினைத் தாபித்தல்

■மா ஓயா, அத்தனகலு ஓயா, பெந்தர கங்கையினை அடிப்படையாகக் கொண்ட நீர்ப்பாசன அமைப்புகளுக்கு 500 மில்லியன் ரூபாய் வழங்கல்

## மறுசீரமைப்பு மற்றும் முகாமைத்துவம்

■நாட்டின் அனைத்து அபிவிருத்தி தலையீடுகள் பற்றிய நடைமுறைப்படுத்தல் பிரச்சினைகளை கண்டறிந்து, தோன்றுகின்ற பிரச்சினைகளை முன்னுரிமை அடிப்படையில் தீர்ப்பதற்காக தேசிய தொழிற்பாடுகள் நிலையமொன்றினைத் தாபித்தல்

■நிதியியல் ரீதியாக மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த அரசுக்கு சொந்தமான தொழில்முயற்சிகளை மறுசீரமைத்தல்

## சமூக மற்றும் சுற்றாடல் நலன்

■முதியோர் / மாற்றுத் திறனாளிகள் / விதவைகள் / வீட்டலகு தொழில்முயற்சியாளர்களை வலுப்படுத்தல்

■ பசுமை ஹைட்ரஜனினை வர்த்தக நோக்கத்தில் தயாரிப்பது தொடர்பிலான ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு அரசாங்க மற்றும் தனியார்துறையின் ஒத்துழைப்புடன் ஒன்றிணைந்த கருத்திட்டமொன்றினை ஆரம்பித்தல்

■பூகோள வெப்பமாதல் அதிகரித்துச் செல்லும் போக்குடன் வனப் பரம்பலினை அதிகரிப்பதற்கான முக்கியத்துவம்

■மீள்புதிப்பிக்கத்தக்க சக்தியினை உபயோகித்து மின்சார உற்பத்தியினை ஊக்குவிக்கும் பொருட்டு, அதனுடன் தொடர்புடைய அதற்குரிய சூரிய பலகங்களை உள்நாட்டில் தயாரிப்பதை ஊக்குவித்தல்

# விபச்சார விடுதி என்றவர் மன்னிப்பு கேட்கவேண்டும்

■ வி.ரி சகாதேவராஜா

தமிழ்த் தேசிய கூட்டமைப்பை விபச்சார விடுதி என்று கூறி, ஒரு பாராளுமன்ற உறுப்பினர் வீட்டுக்குள் இருந்து கல்லெறிந்து இருக்கின்றார். அவர் மனநோயால் பாதிக்கப்பட்டு இருக்கக்கூடும். அவர் உடனடியாக இந்தக் கூற்றை வாபஸ் பெற்று, பொது மன்னிப்பு கேட்க வேண்டும் என்று காரைதீவு பிரதேச சபையின் தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் கண்டனம் தெரிவித்துள்ளார்.



காரைதீவு பிரதேச சபையின் 57ஆவது மாதாந்த அமர்வு நேற்று (14) நடைபெற்ற பொழுது தலைமை உரையாற்றிய போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நேற்றைய சபை அமர்வின்போது, உறுப்பினர்களின் குடும்ப உறுப்பினர்களும் தென்கிழக்கு பல்கலைக்கழக மாணவர்கள் சிலரும் வருகை தந்திருந்தார்கள்.

அங்கு தவிசாளர் மேலும் உரையாற்றுகையில், தமிழ்த் தேசிய கூட்டமைப்பு பாரம்பரியமான கட்சி; தலைவரால் உருவாக்கப்பட்டது. அந்தக் கட்சிக்குள் இருந்து கொண்டே அதை விமர்சிப்பது கீழ்த்தரமானது. அவர் வேண்டுமானால் கட்சியில் இருந்து விலகி விட்டு விமர்சிக்கட்டும். ஆனால் உள்ளுக்குள்ளே இருந்து இந்த விமர்சனத்தை செய்வது, தனது தாயை ஒரு விபச்சாரி என்று சொல்வது போன்றதாகும் என்றார்.



# அடைமழையிலும் பெரும் போக பயிர்ச்செய்கை மும்முரம்

■ எப். முபாரக்

திருகோணமலை மாவட்டத்தில் கந்தளாய் நீர்பாசன பொறியியலாளர் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் பெரும்போக பயிர்ச்செய்கை நடவடிக்கைகள் மும்முரமாக நடைபெற்று வருகின்றன.

கந்தளாய், மூதூர், கிண்ணியா ,தம்பலகாமம், வான் ஏல போன்ற இடங்களில் பயர்ச்செய்கை முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. கந்தளாய் குளத்தின் நீரை பயன்படுத்தி 16,800 ஏக்கர் நெற் செய்கை நவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

அடை மழை என்றும் பாராமல் வயல் அடித்தல், வரம்புகட்டுதல், விதைத்தல் போன்ற நடவடிக்கைகளை விவசாயிகள் முன்னெடுத்து வருகின்றனர்.



# நீரிழிவு விழிப்புணர்வு கண்காட்சி

■ வடமலை ராஜ்குமார்

கிழக்கு மாகாண சுதேச மருத்துவத் திணைக்களம், இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகராலயம் ஆகியன இணைந்து கப்பல் துறை தள ஆயுர்வேத வைத்தியசாலை ஊடாக நடத்தும் நீரிழிவு விழிப்புணர்வு கண்காட்சி, நேற்று (14) திருகோணமலை நகர சபையின் மண்டபத்தில் ஆரம்பமானது.

இந்நிகழ்வில் இலங்கைக்கான இந்திய தூதரகத்தின் யாழ்ப்பாண அலுவலக துணை தூதர் ராகேஷ் நடராஜ் கௌரவ விருந்தினராகவும் கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் ஜே.ஜே முரளிதரன் சிறப்பு விருந்தினராகவும் கிழக்கு மாகாண சுதேச மருத்துவ திணைக்கள ஆணையாளர் திருமதி ஆர். ஸ்ரீதர், திருகோணமலை நகராட்சி மன்ற செயலாளர் வெ. இராஜசேகர் ஆகியோர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

நிகழ்வில், நீரிழிவு நோய் தொடர்பாக ஆலோசனைகள், காட்சிப்படுத்தலும் இரத்தப் பரிசோதனையும் பாரம்பரிய உணவு முறையும் மூலிகை தாவரங்களின் காட்சிப்படுத்தலும் விற்பனையும் இடம்பெற்றன. இன்று (15) வரை இந்த நிகழ்வு நடைபெறும்.



# சாதனையாளர்களுக்கு பாராட்டும் கௌரவமும்




■ நூருல் ஹுதா உமர்

கல்முனை கல்வி வலய மருதமுனை அல்- ஹம்றா வித்தியாலயத்திலிருந்து தேசிய மற்றும் மாகாண மட்டங்களில் சாதித்த மாணவர்களை பாராட்டி, கௌரவிக்கும் நிகழ்வு, பாடசாலை அதிபர் ஐ. உவைதுல்லாஹ்வின் தலைமையில் நேற்று (14) பாடசாலை திறந்தவெளி அரங்கில் நடைபெற்றது.

தேசிய மட்ட பேச்சுப் போட்டியில் வெண்கலப்பதக்கம் வென்ற முஹம்மட் வலீத் பாத்திமா ஜெஸ்னா, மாகாண மட்ட சமூக விஞ்ஞான போட்டியில் முதலிடம் பெற்ற எஸ்.எம். அபாப், ஏ.எஸ். ஹயானி, சதுரங்க போட்டியில் தனிப்பிரிவில் முதலிடம் பெற்ற எம்.எஸ். ஆயிஷா, ஆங்கில தினப்போட்டியில் மாகாணத்தில் இரண்டாமிடம் பெற்ற எம். அனுபா ஆகியோரை பாடசாலை சமூகம் வரவேற்பளித்து பாராட்டி கௌரவித்தது.



இந்த நிகழ்வில் பாடசாலையின் பழைய மாணவரும், கல்முனை வலயக் கல்வி அலுவலக பணிப்பாளருமான எம்.எஸ்.எஸ். நஜீம் பிரதம அதிதியாக கலந்து கொண்டார். கல்முனை வலயக்கல்வி அலுவலக உதவி கல்விப்பணிப்பாளர் கே.குணசேகரன், ஓய்வுபெற்ற கோட்டக்கல்வி அதிகாரி ஏ.எல். சஹாப், பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்றுக்குழு செயலாளர் பீ.எம். நஸ்ருதீன், தேசிய மட்ட பேச்சுப்போட்டியில் வெண்கலப்பதக்கம் வென்ற முஹம்மட் வலீத் பாத்திமா ஜெஸ்னாவின் தந்தையும் உள்ளூராட்சி செயற்றிட்ட ஆலோசகருமான எம்.ஐ.எம். வலீத், அவரின் பாரியார் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

# சிறுவர் இல்ல பணம் மோசடி

## போலி பற்றுச்சீட்டு அடித்து 'ஆப்பு' வைத்த ஊழியர்

■ கனகராசா சரவணன்

மட்டக்களப்பிலுள்ள வலுவிழந்த சிறுவர் இல்லத்துக்கு இலண்டனில் இருந்து அன்பளிப்பாக வழங்கப்பட்ட பணத்தை மோசடி செய்த குற்றச்சாட்டில், அங்கு கடமையாற்றிய ஒருவர் ஞாயிற்றுக்கிழமை (13) கைது செய்யப்பட்டுள்ளார்.

மட்டக்களப்பு மாநகர சபைக்கு உட்பட்ட பிரதேசத்தில் வலுவிழந்த சிறுவர்களை பராமரிப்பதற்காக இல்லம் அமைக்கப்பட்டு, நீண்ட காலமாக பராமரித்து வருகின்றார்கள். இந்த நிலையில், தன்னாமுனையைச் சேர்ந்த 38 வயதுடைய ஆண் ஒருவர், அங்கு கடமையாற்றி வந்துள்ளார்.

இதன் போது, இலண்டனில் வசித்துவரும் ஒருவர், அந்த இல்லத்துக்கு வருகை தந்தபோது, இல்லத்தை பார்வையிட குறித்த நபர் உதவி செய்த நிலையில், அவர்கள் இருவருக்கும் நட்பு ஏற்பட்டது.

இலண்டனில் இருந்து வந்தவர் இலண்டன் சென்று, வலுவிழந்த சிறுவர் இல்லத்தின் புகைப்படங்களை தனது நண்பர்களுக்கு காட்டிதையடுத்து, அவர்கள் அந்த இல்லத்துக்கு உதவி புரிய விரும்பினர். அவரும் தனக்கு உதவி புரிந்த, அங்கு கடமையாற்றிவரும் குறித்த நபரின் தொலைபேசி இலக்கத்தை வழங்கியுள்ளார்.

இவ்வாறான நிலையில், குறித்த நபரின் வங்கி கணக்குக்கு சிறுவர் இல்லத்துக்கு வழங்குமாறு அனுப்பிய நிதிகளை, அவர் இல்லத்துக்கு வழங்கியது போல பற்றுச் சீட்டுகளை ஏறாவூரில் உள்ள அச்சகத்தில் அச்சிட்டு, அந்தப் போலி பற்றுச் சீட்டில் பணத் தொகையை நிரப்பி, முத்திரைகள் குற்றி, பணத்தை அனுப்பியவர்களுக்கு 'வட்ஸ் ஆப்' ஊடாக அனுப்பியுள்ளார். இவ்வாறு, 1675,000 ரூபாய் வரையில் பண மோசடி செய்யப்பட்டுள்ளது.

இந்த மோசடி தொடர்பாக, சிறுவர் இல்ல நிர்வாகிகளுக்கு தெரியவந்ததை அடுத்து, மட்டக்களப்பு விசேட குற்ற விசாரணைப் பிரிவினருக்கு முறைப்பாடு செய்யப்பட்டதை அடுத்து, விசேட குற்ற விசாரணைப் பிரிவின் பொறுப்பதிகாரி சப் இன்பெக்ஸ்டர் பத்திராஜா தலைமையிலான பொலிஸ் குழுவினர் விசாரணைகளை முன்னெடுத்தனர்.

பொலிகண்டி அகதிமுகாமில் அல்லலுறும் பலாலி கிராம மக்கள்

# "எமது காணிகளை இராணுவம் அபகரித்து பலன் பெறுகிறது"

## 'நாங்கள், அகதிகளாக வெள்ளத்திலும் குடிசைகளிலும் அந்தரிக்கிறோம்"

■ எஸ். றொசேரியன் லெம்பேட்

சொந்த நிலங்களை விட்டு அகதி முகாமில் வசிக்கும் நாங்கள் மழை காலங்களில் கோவில்களிலும் அரச கட்டடங்களிலும் அகதிகளாக செல்வதும் மழை நின்ற உடன் மீண்டும் அகதி முகாமுக்கு வருவதும் தொடர்கதையாக உள்ளது என இடம் பெயர்ந்துள்ள பலாலி கிராம மக்கள் தெரிவித்தனர்.



யாழ்ப்பாணத்தில் கடந்த சில நாள்களாகப் பெய்து வரும் தொடர் மழை காரணமாக, வீடுகளுக்குள் வெள்ள நீர் புகுந்து உறவினர்களின் வீடுகளிலும் அரச கட்டடங்களிலும் தங்கியுள்ள பொலிகண்டி அகதி முகாம் மக்களை, ஞாயிற்றுக்கிழமை (13) மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தினரும் வலி வடக்கு வள நிலையத்தினரும் நேரில் சென்று பார்வையிட்டு, அவர்களது குறைகளை கேட்டறிந்தனர்.

இதன்போது, தமது அவலநிலை குறித்துத் தெரிவித்த பாதிக்கப்பட்ட மக்கள், 1990ஆம் ஆண்டு, பலாலி பகுதியில் இருந்து இடம்பெயர்ந்து இப்பகுதிக்கு வந்தோம். எமது காணிகளை இராணுவத்தினர் அபகரித்து, பயன் தரும் மரங்களை உண்டாக்கி, கட்டடங்களை அமைத்து பலன் பெற்று வருகிறார்கள். ஆனால் நாங்கள், எதுவும் இல்லாத அகதிகளாக மழை வெள்ளத்திலும் ஓலை குடிசைகளிலும் வாழ்ந்து வருகிறோம்.

தற்போது பெய்த மழையால், வீடுகள் முழுவதும் கழிவு நீர் நிறைந்துள்ளது. மலசலக் கூடங்கள் பாவிக்க முடியாமல் சிறுவர்கள், பெண் பிள்ளைகளுடன் திண்டாடி வருகின்றோம். மழையில் பாடசாலை புத்தகங்களை கூட பாதுகாக்க முடியவில்லை. பிள்ளைகளின் கல்வி சீரழிந்து போகிறது.

பலாலியில் உள்ள எமது சொந்தக் காணியில் எம்மை குடியேற்றம் செய்யுமாறு, பல வருடங்களாக ஜனாதிபதி, அரச அதிகாரிகளிடம் கெஞ்சி மன்றாடுகிறோம். அதை எவரும் கேட்கவும் இல்லை; எமக்குத் தீர்வு கிடைக்கவும் இல்லை என பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவித்தனர்.

இந்த மக்கள் சந்திப்பில், மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் பணிப்பாளர் ஜாட்சன் பிகிராடோவும் குழுவினரும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.



# தற்காலிக வீடுகளில் அல்லப்படும் மக்கள்

■ செ. கீதாஞ்சன்

முல்லைத்தீவு மாவட்டத்தில் வீட்டுத்திட்டம் கிடைத்தும், மீதிப்பணம் இடைநிறுத்தப்பட்டு உள்ளதால் கட்டிய அரைகுறை வீட்டை நம்பி, தற்காலிக வீட்டில் வாழும் மக்கள், தற்போதைய பருவமழையால் பெரும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளார்கள்.

புதுக்குடியிருப்பு பிரதேசத்தில், மைதிரிபால சிறிசேனா ஜனாதிபதியாக இருந்த காலத்தில், தேசிய வீடமைப்பு அதிகார சபையால் 1,600 குடும்பங்களுக்கு வீட்டுத்திட்டம் வழங்கிவைக்கப்பட்ட போதும், அது வெறும் அத்திவாரத்துடன் நிறுத்தப்பட்டநிலையில், ஆட்சி மாற்றத்தைத் தொடர்ந்து, மீதிப்பணம் கிடைக்காத நிலையில், தற்போதும் மக்கள் தற்காலிக கொட்டில்களில் மழைவெள்ளத்துக்கு மத்தியில் வாழ்ந்து வருகின்றார்கள்.



# பாடசாலைகளில் பால் வழங்கும் திட்டம்

■ எஸ். றொசேரியன் லெம்பேட்

மன்னார் மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளில் வறுமைக்கோட்டின் கீழ் கல்வி கற்கும் மாணவர்களின் நலனை கருத்தில் கொண்டு, வடமாகாண ஆளுநரின் நிதி உதவியுடன் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு ஒரு நேர பால் வழங்கும் நிகழ்ச்சித்திட்டம் மடு கல்வி வலயத்துக்கு உட்பட்ட ஆண்டாங்குளம் றோமன் கத்தோலிக்க தமிழ் ம.வித்தியாலயத்தில், மன்னார் மாவட்ட செயலாளர் திருமதி ஏ. ஸ்ரான்லி டிமெல் தலைமையில் நேற்று (14) ஆரம்பித்து வைக்கப்பட்டது.

**" மடு கல்வி வலயத்தில் வறுமைக்கோட்டின் கீழ் கல்வி கற்கும் மாணவர்களின் நலனை கருத்தில் கொண்டு தெரிவு செய்யப்பட்ட 23 பாடசாலைகளைச் சேர்ந்த 1,338 மாணவர்களுக்கு ஒரு நேர பால் வழங்கப்படுகின்றது**

மடு கல்வி வலயத்தில் தெரிவு செய்யப்பட்ட 23 பாடசாலைகளைச் சேர்ந்த 1,338 மாணவர்கள் குறித்த திட்டத்தில் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர்.

முள்ளியவளையில் மாவீரர் துயிலும் இல்லத்தில்

# படையினரின் எதிர்ப்பையும் மீறி சிரமதானம் முன்னெடுப்பு

■ செ. கீதாஞ்சன்

முள்ளியவளை மாவீரர் துயிலும் இல்லத்தில் நவம்பர் 27ஆம் நாள் மாவீரர் நாள் நிகழ்வை நினைவில் கொள்வதற்காக, பொதுமக்கள் மற்றும் கரைத்துறை பற்று பிரதேச சபையின் தவிசாளர், உறுப்பினர்கள் ஆகியோர் இணைந்து ஞாயிற்றுக்கிழமை (13) சிரமதானப் பணியை முன்னெடுத்தனர்.

இதன்போது, பிரதேச சபையின் தவிசாளர், உறுப்பினர்களை அருகில் உள்ள படை முகாமினர் விசாரணைக்காக அழைத்து, துப்புரவு செய்ய வேண்டாம் என வற்புறுத்தியதாக பிரதேச சபை உறுப்பினர் அமலன் தெரிவித்தார். படையினரின் எதிர்ப்பை மீறி, சிரமதான பணி தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டது.



# சிறுமியை கொடூரமாக தாக்கிய தந்தை கைது

■ செந்தூரன் பிரதீபன்

ஊர்காவற்றுறை, கரம்பொன் பகுதியில் நான்கு வயது சிறுமியை மூர்க்கத்தனமாகத் தாக்கி, சித்திரவதை செய்த தந்தை நேற்று (14) காலை யாழ். நகரில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவரிடம் மேற்கொண்ட விசாரணைகளின்போது, மனைவியுடன் முரண்பட்டு மகளைத் தாக்கி காணொளி எடுத்தார் எனவும் அது மனைவியின் அலைபேசியில் இருந்து அவரது நண்பிக்கு அனுப்பப்பட்ட நிலையில், வெளியே வந்தது என அவர் தெரிவித்தார் எனக் கூறப்படுகின்றது.

சந்தேக நபர் திருமணமாகி, மூன்று வருடங்கள் பிரிந்து வாழ்ந்த நிலையில், கடந்த ஒரு மாதத்துக்கு முன்னரே, மனைவியின் வீட்டுக்குச் சென்று மனைவியையும் மகளையும் அழைத்துச் சென்றார் எனவும் மனைவியையும் மகளையும் சித்திரவதை செய்தார் எனவும் தகவல்கள் வெளியாகி உள்ளன.

வெள்ளிக்கிழமை (11) மீட்கப்பட்ட தாயும் மகளான சிறுமியும், யாழ். போதனா வைத்தியசாலையில் தொடர்ந்து சிகிச்சை பெற்று வருகின்றனர். இதேவேளை, சிறுமி தாக்கப்பட்டமை மற்றும் பெண்ணுக்கு இழைக்கப்பட்ட அநீதிகள் தொடர்பாக, இதுவரை எந்தவொரு பெண்கள் மற்றும் சிறுவர் அமைப்புகளும் குரல்கொடுக்கவில்லை என சமூக ஆர்வலர்கள் விசனம் வெளியிட்டுள்ளனர்.

நுவரெலியா மாவட்டத்திலுள்ள கல்வி வலயங்களை

# மூன்றாக மாற்ற வேண்டும்

## கல்வி இராஜாங்க அமைச்சர் கோரிக்கை

எம். செல்வராஜா



அரசாங்கத்தின் புதிய கல்வித் திட்டத்துக்கு அமைய, நுவரெலியா மாவட்டத்தில் காணப்படும் இரண்டு கல்வி வலயங்களை மூன்று கல்வி வலயங்களாக மாற்றுவதுடன், தகைமையுள்ள ஆசிரியர்களை வலயம் மற்றும் கோட்டக்கல்வி அலுவலகங்ளில் நிர்வாக சேவைகளுக்கு தெரிவு செய்ய வேண்டுமென்று, கல்வி இராஜாங்க அமைச்சர் அ. அரவிந்தகுமார் கோரியுள்ளார்.

கல்வி இராஜாங்க அமைச்சரால் மத்திய மாகாண ஆளுநர் லலித் யு. கமகேவுக்கு அனுப்பியுள்ள கடிதமொன்றிலேயே, மேற்கண்டவாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அக்கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

நுவரெலியா பிரதேச பாடசாலைகள் ஒரு கல்வி வலயமாகவும், தலவாக்கலை, ஹட்டன் பிரதேசங்களுக்கு ஒரு கல்வி வலயமாகவும், நோர்வூட் பிரதேசத்துக்கு ஒரு கல்வி வலயமாகவும் மூன்று கல்வி வலயங்கள் அமைய வேண்டும்.

நுவரெலியா மாவட்டத்தில் பெருமளவில் தமிழ் மக்கள் வாழ்ந்து வருகின்றனர். ஆனாலும், உரிய வகையில் தமிழ்க் கல்வித்துறைக்கு வாய்ப்புகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை. புதிய கல்வித்திட்டத்திற்கமைய தமிழ்க் கல்வித் துறைக்கு முன்னேற்றகரமான மாற்றத்தினை ஏற்படுத்தியேயாக வேண்டும். அதற்கான தருணம் தற்போது கிடைத்துள்ளது.

இம் மாவட்டத்தின் தமிழ்க் கல்வித் துறைக்கு வழங்கப்பட்டிருக்கும் விடயங்கள் குறித்து திருப்திப்பட முடியாது. ஜனாதிபதி எனக்கு கல்வி இராஜாங்க அமைச்சினை வழங்கும் போது, பெருந்தோட்டப்பகுதி தமிழ் பாடசாலைகளின் மேம்பாடுகள் விடயமாக கூடிய கவனம் செலுத்தப்படல் வேண்டுமென்று அறிவுறுத்தல் கொடுத்ததையும் இங்கு நினைவு கூர வேண்டியுள்ளது.

தமிழ்க் கல்வி பணிப்பாளர்களாக கடமையாற்றக் கூடிய தகுதியுள்ளவர்கள் பலர் இருந்து வருகின்றனர். இத்தகையவர்களை இனம்கண்டு அவர்களுக்கு அப் பதவிகள் வழங்கப்படல் வேண்டும்.

இவ்வகையில் நுவரெலியாவில் அறுவர், ஹட்டனில் எட்டு பேர், கொத்மலையில் மூன்று பேர், வலப்பனையில் ஒருவர் என்ற அடிப்படையில் தகைமையுள்ளவர்கள் உள்ளனர். இவர்களை வலயம் மற்றும் கோட்டக் கல்வி என்ற ரீதியில் கல்வி நிர்வாக சேவைக்கு உட்படுத்தக்கூடியதாக இருக்கும் என தனது கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

## தாக்குதலுக்கு இலக்காகி 3 வயது சிறுவன் பலி

மஹேஸ் கீர்த்திரத்ன



மாத்தளை, உக்குவளை, லேலிஅம்ப பிரதேசத்தில் தாயும் பிள்ளைகள் மூவரும் கூரிய ஆயுதத்தால் தாக்குதலுக்கு இலக்காகி காயமடைந்த நிலையில், 3 வயது சிறுவன் ஒருவன் உயிரிழந்துள்ளதாக மாத்தளை பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் நேற்று (14) காலை இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்த சிறுவனின் சகோதரர்கள் இருவரும் பாடசாலை செல்லத் தயாராகிக்கொண்டிருந்த போது, அவர்களது வீட்டுக்கு வந்த நபர் ஒருவர் இவ்வாறு சிறுவர்களின் தாயையும் பிள்ளைகளையும் தாக்கி காயப்படுத்தியதாகவும் இதன்போது அவர்களின் தந்தை தொழிலுக்குச் சென்றிருந்தாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவத்தில் லேலிஅம்ப பிரதேசத்தைச் சேர்ந்த 38 வயது தாயும் 19 வயது மகளும் மற்றுமொரு சிறுவனும் பாரிய காயங்களுடன் மாத்தளை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளதுடன், அவர் மனைவியைப் பிரிந்து தனியாக வாழ்பவர் என்றும் தெரியவந்துள்ளதுடன் தாக்குதல் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## கண்டிக்குச் சென்ற எம்.பிக்களூக்கு எதிர்ப்பு

ஷேன் செனவிரத்ன



பாராளுமன்ற உறுப்பினர்களான விமல் வீரவன்ச, வாசுதேவ நாணயக்கார, திஸ்ஸ வித்தாரண ஆகிய மூவரும் நேற்று முன்தினம் (13) கண்டியில் நடைபெற்ற நிகழ்வொன்றின் போது, பொதுமக்களால் ஹூ... சத்தமிட்டு துரத்தப்பட்டுள்ளனர்.

இதன்போது பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச, பாதுகாப்பு அதிகாரிகளின் பாதுகாப்புடன் வாகனத்தில் ஏறி அங்கிருந்து சென்ற நிலையில், அங்கு பதற்றமான நிலை ஏற்பட்டதாகவும் இதனால் வாசுதேவ நாணயக்கார எம்.பி, திஸ்ஸ விதாரண எம்.பி ஆகியோர் நிகழ்வு மண்டபத்தை விட்டு வெளியேற முடியாத நிலையும் ஏற்பட்டது.

அங்கு இருதரப்பினரிடையே ஏற்பட்ட பிரச்சினையால் குறித்த இரண்டு பாராளுமன்ற உறுப்பினர்களும் பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் அங்கிருந்து வெளியேறிய போதும் அவர்களுக்கும் அங்கிருந்த மக்கள் பலத்த ஹூ சத்திமிட்டனர்.

எனினும், அங்கு குழுமியிருந்தவர்களை நோக்கி கையசைத்து, சிரித்தவாறே பாராளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார வெளியேறி சென்றமை குறிப்பிடத்தக்கது.

ஜனாதிபதி அமைப்பதாக கூறிய

## ஆணைக்குழு நடைமுறைக்கு வரவேண்டும்

பி.கேதீஸ்



மலையக மக்களின் பிரச்சினைகள் தொடர்பாக ஜனாதிபதி அமைப்பதாக கூறிய ஆணைக்குழு நடைமுறைக்கு வர வேண்டும் என மத்திய மாகாண சபையின் முன்னாள் உறுப்பினரும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பிரதித் தலைவருமான கணபதி கனகராஜ் தெரிவித்துள்ளார்.

அவர் இது தொடர்பாக தெரிவிக்கையில்,

கடந்த மாதம் 30ஆம் திகதி இலங்கை தொழிலாளர் காங்கிரஸுடனான சந்திப்பின்போது, மலையக மக்களை தேசிய நீரோட்டத்துடன் இணைப்பது தொடர்பாக ஆணைக்குழு ஒன்றை அமைக்கப் போவதாக ஜனாதிபதி தெரிவித்தார்.

இது மலையக மக்கள் மத்தியில் பெரும் வரவேற்பு பெற்றிருந்தது. ஆனால், இதற்கு இதுவரை செயல் வடிவம் கொடுக்கப்படவில்லை. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மலையக மக்கள் தொடர்பாக ஆழமாக அறிந்தவர் என்ற வகையில் அவருடைய அறிவிப்பு நடைமுறைக்கு வந்து ஆணைக் குழுவின் அறிக்கைகள் அமல்படுத்தப்படுமாக இருந்தால் மலையக மக்களின் வாழ்வியலில் சாதகமான அபிவிருத்திகள் ஏற்பட வாய்ப்புள்ளது.

இவற்றை நடைமுறைப்படுத்துவதற்கு முன்னாள் ஜனாதிபதிகளான ஜே.ஆர், பிரேமதாஸ ஆகியோரின் துணிவான அணுகுமுறைகளை பின்பற்ற வேண்டும்.

இந்த ஆணைக்குழுவில் மலையக மக்களை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற வகையில் உறுப்பினர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள் என எதிர்பார்க்கிறோம் என தெரிவித்துள்ளார்.

மண்சரிவால்

## லுணுகல– மட்டக்களப்பு பிரதான வீதிக்கு பூட்டு

எம்.செல்வராஜா, ஆ. புவியரசன்



லுணுகல பகுதியில் நேற்று (14) இடம்பெற்ற பாரிய மண் சரிவையடுத்து, லுணுகல - மட்டக்களப்பு பிரதான வீதி மூடப்பட்டுள்ளது.

நேற்று (14) காலை பெய்த கடும் மழையைத் தொடர்ந்து, மண்மேடு பிரதான பாதையில் சரிந்துள்ளது.

இந்த மண்மேட்டை அகற்றும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில், இன்னும் ஓரிரு தினங்களுக்கு அவ்வீதி வழியான வாகன போக்குவரத்துக்களுக்கு தடை ஏற்படலாம் என்றும் எனவே, மாற்று பாதைகளைப் பயன்படுத்துமாறு வாகன சாரதிகளுக்கு பொலிஸார் அறிவுறுத்தியுள்ளனர்.

அத்துடன், எல்ல - வெள்ளவாயா பிரதான வீதியில் பாரிய மரங்கள் மற்றும் கற்பாறைகள் சரிந்திருப்பதால், அவ் வழியுடனான போக்குவரத்துகளும் தடைப்பட்டுள்ளன.

அத்துடன் எல்ல முதல் இதல்கஸ்ஹின்ன, ஒஹிய பகுதியின் ரயில் பாதைகளில் மணிசரிவு இடம்பெற்றுள்ளதால் ரயில் போக்குவரத்துக்கும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

மழையால் ஊவா மாகாண மக்களின் இயல்பு வாழ்க்கை முற்று முழுதாக பாதிக்கப்பட்டுள்ளதால் அவர்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புகளை நிவர்த்தி செய்யும்படி கல்வி இராஜாங்க அமைச்சர் அ. அரவிந்தகுமார், பதுளை மாவட்ட அரச அதிபரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

மஸ்கெலியா பிரதேச சபையின்

## பட்ஜெட் நிறைவேறியது

செ.தி.பெருமாள்

மஸ்கெலியா பிரதேச சபையின் அடுத்த ஆண்டுக்கான வரவு- செலவு திட்டம் 9 மேலதிக வாக்குகளால் நிறைவேறியது.

சபை அமர்வுகள் நேற்று (14) காலை ஆரம்பமானதை அடுத்து, வரவு- செலவு திட்ட யோசனை முன்வைக்கப்பட்டது.

இதற்கு ஆதரவாக 12 வாக்குகளும் எதிராக 3 வாக்குகள் வழங்கப்பட்ட நிலையில், வரவு- செலவு திட்டம் 9 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது.

ஐக்கிய தேசிய கட்சியில் தொழிலாளர் தேசிய சங்கத்தின் மூலம் போட்டி இட்ட ப்ரௌன்லோ வட்டார உறுப்பினர் ப்ரௌன்ஸ்வீக் வட்டார உறுப்பினர், ஸ்டோக்ஹோம் வட்டார உறுப்பினர் ஆகிய மூவரும் வரவு- செலவு திட்டத்தை எதிர்த்து வாக்களித்தனர்.

## அமரர் லெனின் மதிவானம்



‘வாசிப்பின் ஊடாக உலகை அடையலாம்’ என்பதற்கு உதாரண புருசராக திகழ்ந்தவர். இலக்கிய உலகு அவர் எழுதுவதையும், பேசுவதையும் நிறுத்திக்கொண்ட போதே பேரிழப்பை சந்தித்தது. இன்று அவரின் மூச்சு நிறுத்தப்பட்டமை மலையகத்திற்கு பேரிழப்பை உணர்த்துகிறது என லெனின் மதிவானனின் மறைவு தொடர்பில் நிகர் சமூக கலை இலக்கிய அரங்கத்தின் அமைப்பாளர் அ.லெட்சுமணன் விடுத்துள்ள இரங்கல் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அமரர் லெனின் மதிவானனின் இலக்கிய பிரவேசம், மலையக கலை இலக்கிய செல்நெறியில் மிகுந்த உத்வேகத்தை தந்ததுடன், ஆசிரியராக, விரிவுரையாளராக, கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தின் பிரதி ஆணையாளராக பரிணமித்து இத்துறையில் முக்கிய அங்கமானார்.

கல்வி நிலையில் தன்னை வளர்த்துக்கொண்டவர். கல்வித்துறை, வாசிப்பின் ஆர்வம் ஊடாக தமிழ் இலக்கியத்துறையில் தவிர்க்க முடியாத ஆளுமையாக திகழ்ந்தவர். திறனாய்வுத்துறையில் தன்னை ஈடுபடுத்தி அத் துறையில் உச்சம் தொட்டவர். 90களின் பிற்பகுதியில் ‘சரிநிகர்’ பத்திரிக்கையின் போட்டி ஒன்றின் ஊடாக மலையக இலக்கிய உலகில் அறிமுகமானார்.

இத்துறையில் அவரின் தூர நோக்கான தரிசனத்தால் மலையகம், தேசியம், சர்வதேசியம் என்ற பார்வையில் தன்னை வியாபித்துக்கொண்டார். மாக்சிய சித்தாந்தத்தின் ஊடாக படைப்புகளை அனுகி அப்படைப்புகள் தொடர்பான விமர்சனங்களை முன் வைப்பதில் நிகரற்றவராக திகழ்ந்தார்.

திறனாய்வு தொடர்பில் இவருடைய எழுத்துகள் இத்துறைசார் ஆர்வலர்களுக்கு முன்மாதிரியானவை. மூன்று தலைமுறை இலக்கிய செயற்பாட்டாளர்களிடையே நேச நட்பை பேணுவதில் மிகச் சிறந்த அனுகுமுறையை பின்பற்றியவர். மூத்த எழுத்தாளர்களின் வழிகாட்டலை மதித்தலுடன், சமகால எழுத்தாளர்களுடன் நேசமிகு புரிதலுடன், புதியவர்களுக்கு வழிகாட்டும் பக்குவமும் இவரில் சிறந்தது.

குழு வாதங்கள் என்பது மலையக இலக்கிய செல்நெறியில் மிகுந்த அபந்தமாகிறது. இச் சூழலில் இவரின் அனுகுமுறைகள் திறந்த நோக்கம் கருதியதாக அமைந்தன. கருத்தியல் ரீதியில் வேறுபட்ட சித்தாந்தங்களை கொண்டிருந்த போதிலும் பரந்துப்பட்ட எண்ணத்தோடு எல்லோரிடமும் பழகிய விதம் இவரை இலக்கிய உலகு உச்சத்திற்கு கொண்டு சென்றது. பிரதேசம் கடந்து, மொழிகள் கடந்து, இனங்கள் கடந்து, நாடுகள் கடந்து ஒரு பொதுப்பிரஜையாக நிலைநிறுத்திக்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

இலங்கை கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தின் பிரதி ஆணையாளர் என்ற பொறுப்பில் அமர்ந்த போது, மலையக இலக்கிய தடங்களை பாட நூல்களில் இணைத்த செயற்பாடு மிக முக்கியத்திற்குறியது. அவ்வாறே முக்கிய இலக்கிய வடிவங்களை தெரிவு செய்து பாடநூல்கள் ஊடாக மாணவர்களுக்கு அறியச் செய்தார். ஒடுக்கப்பட்ட மக்களின் மேன்மை வேண்டிய எழுத்துகளை வெளிப்படுத்தினார்.

மலையக இலக்கியத்தின் காத்திரத்தை நிறுவுவதில் நிகரற்ற ஒருவராக திகழ்ந்தார்.

மலையக இலக்கிய செயற்பாட்டாளர்கள் மத்தியில், மூத்தவர்கள் வழிப்படுத்துவதில்லை என்ற கோசம் இளையவர்களிடம் நிலவுகிறது. இளையவர்கள் எம்மை மதிப்பதில்லை என்ற வசைப்பாடல் மூத்தோர்களிடம் உள்ளது. இப் போக்குகளால் சமகாலத்தை தொலைத்துக்கொண்டிருக்கிறோம் என்பதை உணர மறுக்கின்றோம். இந்நிலையானது மிகுந்த பிரயத்தனத்தோடு ‘மலையகம்’ என வகவம் அமைத்ததில் பாதிப்பை ஏற்படுத்தும் என்பதை உணர்வோம். இவ்வாறான மனநிலைகளை கடந்து தூரதரிசனத்தோடு பயணித்த தோழர் லெனின் மதிவானனின் அணுகுமுறைகள் முன்மாதிரியானவை. இவரின் அனுகுமுறைகளை பின்பற்றுவதே மலையக கலை, பண்பாட்டு அம்சங்களை சீராக இட்டுச் செல்வதற்கு வழிகோலும் என்பது திண்ணமாகும்.

தன்னை வகவம் அமைத்து, தான் சார்ந்த சமூகத்தின் உணர்வை வெளிப்படுத்துவதிலும், தனக்கு கிடைத்த சந்தர்ப்பங்களை சரியான முறையில் பயன்படுத்திய இவரின் முன்மாதிரி போற்றுதற்குறியதாகும்.

ஹட்டன் -காசல்ரீயில் ஊற்றெடுத்த லெனின், பல ஓடங்களுக்கு வழி சமைத்தவர். தேசியம் கடந்து சர்வதேசிய பரப்பில் மலையக சமூகத்தின் முக்கிய அம்சங்களை காட்டிய அவரது ஆய்வுப் பணிகள் சிறப்பிற்குறியது. ‘மலேசிய தமிழர்களின் சமகால வாழ்வியல் பரிமானங்கள் - சில அவதானிப்புகள்’, பேராசிரியர் கைலாசபதியின் சமூக மாற்றத்தின் இயற்காற்றல்’ ‘மலையகம், தேசியம், சர்வதேசியம்’, ‘ஊற்றுகளும் ஓடங்களும’ ஆகிய நூல்களை பிரசவித்துள்ளார். அவரின் உரைகளும், பத்தி எழுத்துகளும் நூலாக்கப்பட வேண்டிய அவசியத்தைக் கொண்டுள்ளன.

பத்தி எழுத்துகள் ஊடாக இவரின் உலகியல் பார்வை விஞ்ஞான மயப்பட்டதை அறியலாம். மலையக இலக்கியம் தொடர்பில் மலையக இலக்கியத்தை ஒப்பியல் நோக்கோடு அணுகிய முறை தெளிவாகிறது. ‘சூரிய காந்தி’ இதழில் முச்சந்தி ஊடாக மலையக இலக்கிய கலைப்பண்பாட்டு மம்சங்களை உலகறியச் செய்த லாவகம் தனித்துவமாக விளங்குகிறது. இவரின் இரு தசாப்தகால பணிகள் தனித்துவ அடையாளமாக திகழ்கின்றமை குறிப்பிடத்தக்கது. அன்னாரின் பணிகள் ஈடுசெய்ய முடியாதவை; பேரிழப்பை உணர்கிறோம். இவர் பிரிவால் துயறுரும் சகலரோடும் நாமும் பங்குக்கொள்கிறோம்.

இதேவேளை அமரர் லெனின் மறைவுக்கு மலையக அரசில் தலைமைகள், கல்வியிலாளர்கள், சமூக ஆர்வலர்கள் என பலரும் தமது இரங்கலைத் தெரிவித்துள்ளனர்.

# போதையை நுகர்ந்து வாழ்க்கையை பூஜ்யமாக்கும் இளசுகள்

தங்களுடைய பிள்ளைகளை தங்களால் திருத்தமுடியாது; ஆகையால் புனர்வாழ்வளிக்குமாறு பெற்றோர்கள் பலர் தாங்களாகவே முன்வந்து, பிள்ளைகளை ஒப்படைக்கும் சம்பவங்கள் நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே செல்கின்றன.

எதிர்காலத்தில் தங்களை பிள்ளைகள் கட்டிக்காத்து காப்பாற்றுவார்கள் என நினைக்கும் பெற்றோர்களின் மத்தியில், பிள்ளைகளை காப்பாற்றத் துடிக்கும் பெற்றோர்களின் எண்ணிக்கையே அதிகரித்துக்கொண்டுச் செல்கின்றது. அந்தளவுக்கு பிள்ளைகளின் மீதான பயம், பெற்றோர்களிடமும் சூழ்கொண்டுவிட்டது.

சில காலங்களுக்கு முன்னர் பிரதான நகரங்களில் மட்டுமே, இளசுகளை பற்றியிருந்த போதைப்பொருள் பாவனை கொஞ்சம், கொஞ்சமாக விரிவடைந்து கிராமங்களுக்குள்ளும் பெருந்தோட்டங்களுக்குள்ளும் புகுந்து இளம் சமுதாயத்தினரின் வாழ்க்கையை சீரழித்துக்கொண்டிருக்கின்றது.

ஒவ்வொன்றையும் பரிசீலித்து பார்க்கும் துடிப்பு மாணவர்களிடம் இருக்கும். சிலர், கல்வி கற்று முன்னேற வேண்டுமென்ற தூரநோக்கத்துடன் பயணிப்பர், இன்னும் சிலர் விளையாட்டுத் துறை உள்ளிட்ட ஏனைய துறைகளின் மீது கடுமையான கவனத்தை செலுத்துவர். எனினும், பரிசீலித்து பார்ப்போரில் பலர், அடிமையாகிவிடுகின்றனர்.

பெரும்பாலான மாணவர்கள் போதைப்பொருள் பாவிக்கின்றனர் என்ற செய்தி, பெற்றோர்களின் உள்ளங்களில் இரும்பை காய்ச்சி ஊற்றியது போலவே இருக்கிறது. தங்களுடைய பிள்ளைகளின் நண்பர்கள் தொடர்பிலும், வெளியில் போகும்போதும், மிகவும் விழிப்பாகவே இருக்கின்றனர். அந்தளவுக்கு நிலைமை மோசமாகிவிட்டது.

பாடசாலைகளிலும், வெளியிலும் தீய பழக்கங்களை வழக்கமாகக் கொண்டவர்களுடன் சகவாசம் கொள்ளும் மாணவர்களில் பலர், மேலதிக வகுப்புகளுக்குச் செல்வதாகக் கூறி, வெளியில் சென்று, போதைப்பொருட்களை பயன்படுத்துகின்றமை கண்டறியப்பட்டுள்ளது.

மாணவர்கள் மட்டுமன்றி, மாணவிகளும் சக நண்பர்களுடனும், காதல் வலையில் வீழ்ந்தவர்கள் காதலனுடனும் இணைந்து போதைக்கு அடிமையாகியுள்ளமை வெளிச்சத்துக்கு வந்துள்ளது.

'போதைக்குப் முற்றுப்புள்ளி' எனும் திட்டம் பல வருடங்களுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்டாலும். அது எந்தளவுக்கு வெற்றியளித்தது என்பது கேள்விக்குறியே, எனினும், நாட்டுக்குள் கடத்திவரப்படும் போதைப்பொருட்களின் தொகை, அதிகரித்துக்கொண்டே செல்கின்றது.

பாதுகாப்பு தரப்பினரால் கைப்பற்றப்படும் போதைப்பொருட்கள், நீதிமன்றத்தில் ஒப்படைப்பதற்கு முன்னரும், ஒப்படைக்கப்பட்டதன் பின்னரும், அதன் நிறை குறைவடைகின்றது. அவை மீளவும் சமூகத்துக்குள் பரவப்படுகின்றது என நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ, தெரிவித்திருந்தமை அபாயகரமானது.

தீயசெயல்கள் மக்களிடத்தில் வெகு சீக்கிரமாகவும் வேகமாகவும் பரவி, இறுகப்பற்றிக்கொள்ளும். அதிலிருந்து மீட்டெடுப்பது இலகுவாக இருக்காது. போதைப்பொருளுக்கு அடிமையானவர்கள் திருட்டு, கொலை, வழிப்பறி உள்ளிட்ட குற்றச்செயல்களிலும் ஈடுபடுகின்றனர்.

நாளொன்றுக்கு தேவையான போதைப்பொருளை கொள்வனவு செய்வதற்காக எதையும் செய்வதற்கு, அடிமையானவர்கள் தயாராகவே இருக்கின்றனர். ஆகையால், தங்களுடைய பிள்ளைகளின் நடவடிக்கையை கண்களில் விளக்கெண்ணெய் விட்டு அவதானிக்க வேண்டியது பெற்றோர்களின் பொறுப்பாகும் என்பதை நினைவில் கொள்க!

தமிழ்Mirror க்கு எழுதுங்கள்
www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk






## வாழ்வியல் தரிசனம்

இந்த உலகில் கதாநாயகர்களை விட வில்லன்கள் அதிமாக இருக்கிறார்கள். இவர்கள் தங்களை வீரர்கள் என எண்ணி, அநியாயங்களை கூசாமல் செய்கின்றனர்.

உலகம் இவர்களைப் பார்த்துப் பழகிவிட்டது. தீமைகளை எதிர்ப்பவர்களைப் பயங்கரவாதிகள் என்கின்றார்கள். உரிமையைக் கோரினால் தவறா?

துட்டர்களின் பக்கம் ஒரு பெரும் கூட்டமே இருக்கின்றது. தீமைகளும் அடக்குமுறைகளும் ஆட்சியின் அலகுகளாக இருக்கையில் நாடு நொடிந்துபோகாமல் வேறென்ன செய்யும்? நாட்டில், நல்ல சிந்தையுள்ள அரசியல்வாதிகள் என்ன செய்கின்றார்கள்?

கெட்டவர்களுக்கு சாமரம் வீசுவதற்கு ஆட்கள் இருக்கின்றார்கள்.தவறு செய்பவர்களுக்குப் பயந்து, மக்கள் பேசாமல் இருக்கின்றார்கள். தவறு செய்யும் அரசியல்வாதிகளுக்கு தண்டனைகள் கிடைப்பதில்லை.


நாட்டின் சொத்துகள் விரயமாவது பற்றி, பலருக்கும் தெரியாது; புரியவும் மாட்டாது. கற்பனையில்த்தான் நல்ல தலைவனை நினைக்கமுடியும்.

காட்டுக்குள் வசிக்கலாம் என்றால், காடுகளையும் அழித்துவிட்டார்கள். என்ன செய்ய முடியும்?

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

### ஆபத்தான நிலையில் பயணிக்கும் கர்ப்பிணிகள்



வவுனியா, நொச்சிமோட்டை கிராம அலுவலர் பிரிவுக்கு உட்பட்ட சாந்தசோலை கிறேசர் வீதியில் அமைந்துள்ள தாய் சேய் நிலையத்துக்கு செல்லும் பிரதான வீதி, படுமோசமான நிலையில் குன்றும் குழியுமாக காணப்படுகின்றது. இந்நிலையத்துக்கு செல்லும் கர்ப்பிணிகள், பாதுகாப்பற்ற நிலையில் பயணிக்க வேண்டியுள்ளது.

இப்பகுதியில் அடிக்கடி விபத்துகளும் இடம்பெற்று வருகின்றன. எனவே குடும்ப நல நிலையத்துக்கு பாதுகாப்பாக சென்றுவருவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு, சாந்தசோலை மகளிர் அமைப்பினர் கோரிக்கை விடுத்துள்ளனர். 1994ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட குறித்த வீதி, கடந்த 28 வருடங்களாக புனரமைப்பு செய்யப்படவில்லை என்பது கவனத்தில் கொள்ளப்பட வேண்டும்.

துவரங்குளம், பேயாடிகூளாங்குளம், மாணிக்கர்வளவு, தம்பனைச்சோலை, சாந்தசோலை ஆகிய கிராமங்களை சேர்ந்த பல கர்ப்பிணிகள் இந்த வீதியில் அமைந்துள்ள தாய்சேய் நிலையத்துக்கு சிகிச்சைக்காக வந்து செல்கின்றனர்.

சாந்தசோலை பிரதான வீதி கார்பெட் வீதியாக செப்பனிடப்பட்டுள்ள போதிலும் குறித்த கிறேசர் வீதி செப்பனிடப்படவில்லை. இது குறித்து, தமிழ் தெற்கு பிரதேச சபை அதிகாரிகளிடமும் பாராளுமன்ற உறுப்பினர்களிடமும் முறையிட்டும், வீதியானது சீர் செய்யப்படவில்லை. எனவே இவ்வீதியை தற்காலிகமாக கிரவல் இட்டு செப்பனிட்டுத் தருமாறு கேட்டுக் கொள்கின்றோம் என்று சாந்தசோலை மாதர் சங்கம் மேலும் வேண்டுகோள்விடுத்துள்ளது.

– க. அகரன்

முஸ்லிம் அரசியல்வாதிகள்

# எந்த முகத்தோடு மக்களிடம் வருவார்கள்?

மொஹமட் பாதுஷா

அரசியல் பரப்பில் உள்ள கட்சிகள், அரசியல் அணிகள் அடுத்த தேர்தலுக்கான வியூகங்களை வகுக்கத் தொடங்கியுள்ளன. உள்ளூராட்சி மன்றங்களின் தேர்தல், மார்ச் மாதத்தில் நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகின்றது. அதன்பிறகு நடைபெறவுள்ள தேர்தல்களுக்கான அடித்தளமாக இது அமையும் என்பதால், இதில் உறுதியான வெற்றியைப் பெற வேண்டிய தேவைப்பாடு எல்லா அரசியல் தரப்புகளுக்கும் உள்ளது.

இந்தப் பின்னணியில், முஸ்லிம் கட்சிகள் மட்டுமன்றி, ஒவ்வொரு தனிப்பட்ட முஸ்லிம் அரசியல்வாதியும் அடுத்த தேர்தலை எதிர்கொள்வது எப்படி என்று சிந்திக்க ஆரம்பித்துள்ளனர். எதைச் சொல்லி இன்னுமொருமுறை முஸ்லிம் சமூகத்தின் வாக்குகளைச் சுருட்டலாம் என்பதுதான், அவர்களது இன்றைய கவலையாக இருக்கின்றது.

அந்தவகையில், 'பருப்பு இனியும் வேகுமா' என்ற சந்தேகம் முஸ்லிம் அரசியல்வாதிகளுக்கு உள்ளதால், புதுக் கதைகளையும் பொய்க் கற்பிதங்களையும் பொய்மூட்டைகளில் நிரப்பிக் கொண்டிருக்கின்றனர். சமூக அக்கறையும் உரிமைசார் உணர்வும் தூசு தட்டப்படுவதை உன்னிப்பாக நோக்கும்போது காண முடிகின்றது.

பிரதான முஸ்லிம் அரசியல் கட்சிகளில் அங்கம் வகிக்கின்ற மற்றும் பெருந்தேசிய கட்சிகளுடன் சங்கமமாகியுள்ள சில முஸ்லிம் எம்.பிக்கள், முன்னாள் எம்.பிக்கள் மற்றும் புதிய முகங்கள், கிழக்கில் ஒரு புதுக் கூட்டணியாகப் போட்டியிடுவதற்கான சாத்தியவள ஆய்வை நடத்திக் கொண்டிருக்கின்றனர்.

சமகாலத்தில், புது முஸ்லிம் அணிகளும் குறிப்பாக புத்திஜீவிகள் சிலரை உள்ளடக்கிய அணியும் அடுத்த தேர்தலை மையமாகக் கொண்டு களமிறங்கலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. மக்கள் சேவைக்காக மட்டுமன்றி, எதிர்காலத்தில் இலகுவாக விசாவைப் பெற்றுக் கொள்வதற்கான உள்நோக்கத்திலும் சிலர் குதிக்கலாம்.

இந்நிலையில், ஏற்கெனவேயுள்ள முஸ்லிம் கட்சிகளில் போட்டியிடுவதால் வெற்றி வாய்ப்பை பெறச் செய்யுமா, தனித்தோ அல்லது வேறு புது அணிகளிலோ போட்டியிட்டால் அரசியல் இருப்பை உறுதி செய்து கொள்ள முடியுமா என்று ஒவ்வோர் அரசியல்வாதியும் மூளையைப் போட்டு பிசைந்து கொண்டிருக்கின்றனர்.

இதுவெல்லாம் சரிதான்! தேர்தல் ஒன்று வருகின்றது என்றால், அதற்காக முன்னாயத்தங்களைச் செய்வதில் ஒன்றும் தப்பில்லை; அது உலக வழக்கம்தான்.

ஆனால், இதுவரை காலமும் முஸ்லிம் தலைவர்களாக, அமைச்சர்களாக, அரை-அமைச்சர்களாக, பாராளுமன்ற உறுப்பினர்களாக பிரதிநிதித்துவ அரசியலிலும் செயற்பாட்டு அரசியலிலும் பதவி வகித்தவர்கள், இந்தச் சமூகத்துக்காக எதைச் சாதித்துள்ளார்கள் என்ற கேள்விக்கு, இவ்விடத்தில் விடைகாண வேண்டியுள்ளது.

முஸ்லிம்களின் பிரச்சினைகளுக்காக தொடர்ச்சியாக குரல் கொடுத்தமையால், உரிமைகளையும் சமூகத்துக்கு உரித்தான பங்குகளையும் பெற்றுக் கொடுத்தமையால், முஸ்லிம் சமூகத்தின் அபிலாஷைகளை முன்கொண்டு சென்றமையால்... இன்னுமொரு முறை வாக்குக் கேட்டு வரப் போகின்றார்களா?

முஸ்லிம் சமூகத்துக்கு நீண்டகாலப் பிரச்சினைகள், குறுங்கால நெருக்கடிகள் உள்ளன. தனியொரு தேசிய இனம் என்ற வகையிலும் இனக் குழுமம் என்ற வகையிலும் பிரத்தியேகமான விடயங்கள் பல உள்ளன.

கடந்த கால் நூற்றாண்டு அரசியலில் முஸ்லிம் காங்கிரஸ், மக்கள் காங்கிரஸ், தேசிய காங்கிரஸ் போன்ற முஸ்லிம் கட்சிகளில் இருந்து தெரிவு செய்யப்பட்ட மக்கள் பிரதிநிதிகள், அதன் தலைவர்கள் இவற்றையெல்லாம் தீர்த்து வைக்க தொடர்ச்சியாக பாடுபட்டிருந்தால், இம்முறையும் வாக்குக் கேட்டு வருவதில் நியாயமுள்ளது.

இவர்களோடு சேர்ந்து, பெரும்பான்மைக் கட்சிகளில் அங்கம் வகித்த, அங்கம்வகிக்கும் முஸ்லிம் எம்.பிக்களும் சட்டமூலங்கள், யாப்புத் திருத்தங்கள், அரசியல் நகர்வுகள் மேற்கொள்ளப்பட்ட காலங்களில் சமூகத்தின் அபிலாஷைகளை நிலைநிறுத்துவதற்காக முன்னின்று இருப்பார்கள் என்றால், இம்முறை தேர்தலில் போட்டியிடுவதை கொஞ்சமேனும் நியாயப்படுத்த முடியும்.

ஆனால், அப்படியெதுவும் நடக்கவில்லையே? முஸ்லிம் சமூகத்தின் நீண்டகாலப் பிரச்சினைகள் தீர்க்கப்படவில்லை. அதற்காக முஸ்லிம் கட்சிகளும் ஏனைய எம்.பிக்களும் முன்னிற்கவில்லை. பல வழிகளிலும் நெருக்கடிகளைச் சந்தித்த போது, தமது பாதுகாப்பு முகாம்களுக்குள் சென்று ஒளிந்து கொண்ட எம்.பிக்கள்தான் அதிகம்.

தமிழ் தேசிய அரசியல்வாதிகளுக்கு இருப்பதைப் போல, சமூக விடுதலை உணர்வும் பிரச்சினைகள் பற்றிய சரியான பார்வையும், முஸ்லிம் தலைவர்களுக்கும் தளபதிகளுக்கும் கிடையாது. இதற்காக, சந்தர்ப்பங்களைப் பயன்படுத்தி சாதித்துக் கொள்ளும் சாதுரியமும் கிடையாது. முஸ்லிம் அரசியல்வாதிகள், வாய்ப்புக் கிடைக்கின்ற போதெல்லாம் தமக்கான அமைச்சுப் பதவிகள், வருமான வழிமூலங்கள், அரசியல் இருப்புக்கான சூழமைவுகளை உறுதி செய்த சந்தர்ப்பங்களை விட, முஸ்லிம் சமூகத்தின் பிரதிநிதிகள் என்ற கடமையை செவ்வனே நிறைவேற்றிய சந்தர்ப்பங்கள் அரிதிலும் அரிது.

ஆனால், இதுவரை காலமும் மேற்சொன்ன எதையும் செய்யாத, இப்போது கூட அதற்கான எந்த முன்முயற்சிகளையும் எடுக்காத முஸ்லிம் தலைவர்கள், எம்.பிக்கள், இனிமேலும் மக்கள் மன்றத்தில் வாக்குக் கேட்டு வருவதற்கு என்ன அடிப்படைத் தகுதியைக் கொண்டுள்ளார்கள்?

அதே குட்டையில் ஊறி, ஊர்களுக்குள் சிறிய அரசியல் பதவிகளில் இருந்தவர்கள், 'அவர்களை விடுங்கள்; நாங்கள் செய்து காட்டுவோம்' என்ற தாரக மந்திரத்தோடு இந்த உள்ளூராட்சி தேர்தலில் அல்லது அடுத்த பாராளுமன்ற தேர்தலில் போட்டியிட முற்படுவதை, எப்படி நம்ப முடியும்? முஸ்லிம் சமூகம் சரியான முறையில் அரசியல் மயப்படுத்தப்படவில்லை. அல்லது அதனை யாரோ குழப்பியடித்துள்ளார்கள். நல்ல அரசியல்வாதிகளை தேர்ந்தெடுக்கும் மனநிலை மாற்றம் மக்களுக்கு ஏற்படவில்லை. மக்கள் பிரதிநிதிகள் திருந்த வேண்டுமென்றால், அரசியல்வாதிகளை திருத்தக் கூடிய அளவுக்கு மக்கள் திருந்த வேண்டும்; அது நிகழவில்லை.

நிலைமை இவ்வாறிருக்க, கிடைத்த வாய்ப்புகளைப் பயன்படுத்தி சமூகத்தின் எந்தப் பிரச்சினைகளையும் தீர்த்து வைக்காத பழைய அரசியல்வாதிகளும், அதே வழித்தடத்தில் வந்த புதுமுகங்களும் இம்முறையும் வாக்குக் கேட்டு வருவதற்கான என்ன முன்தகுதியைக் கொண்டிருக்கின்றார்கள் என்று சிந்திக்க வேண்டியுள்ளது.

தமிழ்த் தேசிய அரசியல்வாதிகள் தமது சமூகத்தின் அபிலாஷைகளை எவ்வாறு முன்னகர்த்திச் செல்கின்றார்கள் என்பதை, இதற்கு முன்னர் வெளியான பல பத்திகளில் நாம் அலசியிருக்கின்றோம்.

தமிழ்த் தேசிய கூட்டமைப்போ அல்லது தமிழ் அரசியல் கட்சிகளோ தமிழ் மக்களுக்கான உண்மையான விடுதலை தாகத்தை முழுமையாக தீர்த்து வைத்தனவா என்றால் 'இல்லை' என்றுதான் கூற வேண்டும். யார் வாக்குறுதி அளித்தாலும், நிஜத்தில் எந்தவோர் அரசாங்கமும் தமிழர்கள் நூறு வீதம் திருப்திப்படக் கூடிய தீர்வொன்றை முன்வைப்பதும் நடைமுறைச் சாத்தியமற்றது.

அதுபோல, இனப்பிரச்சினையை விட முன்னுரிமை அடிப்படையில் தீர்க்க வேண்டியப பல அன்றாட, வாழ்வியல் பிரச்சினைகள் தமிழ் மக்களுக்கும் இருக்கின்றன. எவ்வாறிருப்பினும், தமிழ் மக்களின் அபிலாஷைகளை வென்றெடுக்கும் தோரணையில், தமிழ்த் தேசிய கட்சிகள் மேற்கொள்கின்ற நகர்வுகள் பாராட்டுக்குரியன.

தமிழ் மக்களின் எதிர்பார்ப்புகளை அல்லது அப்படி வகைப்படுத்தப்பட்ட விடயங்களை குறிப்பாக, தமிழ்த் தேசிய கூட்டமைப்பு தொடர்ச்சியாக பேசி வருகின்றது. தமிழருக்கு இருக்கின்ற பிரச்சினைகளின் பட்டியலை, சர்வதேச அரங்கில் காட்சிப்படுத்தி இருக்கின்றது. சில மிகைப்படுத்தப்பட்ட விடயங்கள் இருந்தாலும் கூட, பொதுவில் இலங்கை தமிழர்களின் பிரச்சினை பற்றிய செய்தி உலகின் ஒவ்வொரு மூலைக்கும் கொண்டு செல்லப்பட்டுள்ளது. இதனால், யார் ஆட்சிக்கு வந்தாலும் தமிழ் மக்களின் விவகாரம் தவிர்க்க முடியாத இடத்தைப் பிடித்து விடுகின்றது.

இதேவேளை, கணிசமான தமிழ் அரசியல்வாதிகள் தமக்கு கிடைக்கின்ற வாய்ப்பைப் பயன்படுத்தி, சமூகம் சார்ந்த விடயங்களை வென்றெடுப்பதற்கு பாடுபடுகின்றனர். மலையக தமிழ் மக்கள் விடயத்தில் இந்நிலைமை மிக மோசம் என்றாலும் வடக்கு, கிழக்கை மையமாகக் கொண்ட த.தே.கூ போன்ற அரசியல் அணிகளும், தென்னிலங்கையில் ஓரிரு தமிழ் அரசியல்வாதிகளும் மக்கள் சார்பு விவகாரங்களுக்காக முன்னிற்பதை காண முடிகின்றது. குறிப்பாக, தமிழ்த் தேசிய கூட்டமைப்பு நேரடியாக அரசாங்கத்தில் அங்கம் வகிக்கவில்லை. ஆனால், கனகச்சிதமாக காய்நகர்த்தல்களை மேற்கொண்டு வருகின்றது. ஒருபுறத்தில் வெளிநாட்டு அழுத்தங்களும் மறுபுறத்தில் உள்நாட்டில் இடம்பெறுகின்ற '100 நாள் செயல்முனைவு' போன்ற மக்களின் முன்னெடுப்புகளும் இன்னுமொரு புறத்தில் கூட்டமைப்பின் நகர்வுகளும் தற்செயலாகவே நடக்கின்றன என்று முஸ்லிம் அரசியல்வாதிகள் நினைத்துக் கொள்ளக் கூடாது.

நாடு இத்தனை பொருளாதார, அரசியல் நெருக்கடிகளை சந்தித்துள்ள ஓர் இக்கட்டான காலகட்டத்தில் கூட, 'தமிழர்களின் பிரச்சினைகளை தீர்க்குமாறு' சர்வதேசம் அழுத்தம் கொடுப்பதற்கும், ஜனாதிபதி நாட்டின் உயரிய சபையில் அதற்கான முன்னறிவிப்பைச் செய்வதற்கும் மேற்குறிப்பிட்ட நகர்வுகளே காரணமாகியுள்ளன.

முஸ்லிம் சமூகத்தைப் பொறுத்தவரை, இப்போதுள்ள முஸ்லிம் எம்.பிக்களில் சிலர் நேரடியாகவே அரசாங்கத்தை ஆதரிக்கின்றனர். கிட்டத்தட்ட மீதமுள்ள எல்லோரும் பின்கதவால் அரசாங்கத்துக்கு முட்டுக் கொடுக்கின்றனர்.

இருப்பினும், இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி முஸ்லிம் சமூகத்தின் எந்த நீண்டகால பிரச்சினைகள், குறுங்கால நெருக்கடிகளை இதுவரை அவர்கள் தீர்த்து வைத்துள்ளார்கள்? அல்லது, அப்படி ஏதாவது நடக்கும் என்ற நம்பிக்கையை ஏற்படுத்தும் விதத்தில் எந்த முஸ்லிம் அமைச்சராவது, எம்.பியாவது, தலைவராவது செயற்பட்டுள்ளார்களா? இல்லை!அப்படியென்றால், கொஞ்சம்கூட வெட்கம் இல்லாமல், எந்த முகத்தை வைத்துக் கொண்டு அவர்கள் மீண்டும் மக்களிடம் வாக்குக் கேட்டு வருவார்கள் என்பதை அவர்களும் சிந்திக்க வேண்டும்; மக்களும் நினைவில் கொள்ள வேண்டும்.

இதுவரை தமக்கு மக்கள் அளித்த வாக்குகள், அதன்மூலம் கிடைத்த ஆசனம், அரசியல் அதிகாரத்தை வைத்துக் கொண்டு சமூகத்தின் பிரச்சினைகளை தீர்க்காதவர்கள், அபிலாஷைகளை முன்கொண்டு செல்லாதவர்களுக்கு, இன்னுமொரு தேர்தலில் வாக்குக் கேட்டு வருவதற்கான எந்த அடிப்படை தகுதியும் அருகதையும் இல்லை.

# சிறப்பு முகாமில் முருகன்; ராஜீவ் காந்தி விளக்கம்



முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி படுகொலை செய்யப்பட்ட வழக்கில் பேரறிவாளன், நளினி, முருகன், ரொபர்ட் பயஸ், சாந்தன், ரவிச்சந்திரன், ஜெயக்குமார் ஆகியோர் கைது செய்யப்பட்டு 30 ஆண்டுகளுக்கும் மேலாக சிறையில் அடைக்கப்பட்டிருந்தனர்.

இவர்களின் விடுதலை குறித்து முடிவெடுக்காமல் ஆளுநர் தாமதம் செய்த நிலையில், கடந்த மே மாதம் பேரறிவாளனை உச்சநீதிமன்றம் விடுதலை செய்தது.

இதே காரணத்தைக் கொண்டு நீதிமன்றத்தை அணுகியிருந்த நளினி, முருகன் உள்ளிட்ட ஆறு பேரையும் அண்மையில் நீதிமன்றம் விடுதலை செய்தது.

எவ்வாறு இருப்பினும் நளினியும் ரவிச்சந்திரனும் இந்தியாவைச் சேர்ந்தவர்கள் என்பதால், அவர்கள் தங்களது வீடுகளுக்குச் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

எனினும் ரொபர்ட் பயஸ், சாந்தன், ரவிச்சந்திரன், ஜெயக்குமார் மற்றும் நளினியின் கணவர் முருகன் ஆகியோர் இலங்கையை சேர்ந்தவர்கள் என்பதால் அவர்கள் திருச்சியில் மத்திய அரசின் கட்டுப்பாட்டில் உள்ள சிறப்பு முகாமில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் இலங்கை திரும்பும் வரை இங்குதான் தங்கி இருக்க வேண்டும் எனக் கூறப்படுகின்றது.

இந்நிலையில் இது குறித்து பல்வேறு அரசியல் கட்சியினரும் தமது கண்டனத்தைத் தெரிவித்து வருகின்றனர்.

அதுமட்டுமல்லாது, 30 ஆண்டுகளுக்கும் மேலாக சிறைத் தண்டனை அனுபவித்த இவர்களை சிறப்பு முகாமில் அடைக்காமல் முழுவதுமாக விடுதலை செய்ய வேண்டும் என தமிழ் அரசியல் கட்சியினர் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றனர்.

இந்நிலையில் இதற்கு பின்னால் இருக்கும் பிரச்சினை குறித்து திராவிட முன்னேற்ற கழகத்தின் செய்தித் தொடர்பாளர் ராஜீவ்காந்தி விளக்கியுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள பதிவில், '30 வருட சிறைக்குப் பிறகும் நால்வரை சிறப்பு முகாமில் அடைப்பது ஏற்புடையது அல்ல என்ற ஆதங்கம் எல்லோருக்கும் உண்டு.

ஆனால், சட்டப்படி வெளிநாட்டவர் இங்கு இருந்தால் அகதியாகவோ அல்லது வெளிநாட்டவர் சட்டம் பிரிவு-12 இன் படி ஒன்றிய அரசால் வழங்கப்பட்ட விசா அனுமதியோடு தான் இருக்க முடியும்.

அவர்கள் விரும்பிய நாடு செல்ல உரிய கடவுச்சீட்டு,விசா ஆவணங்களை அவர்கள் ஏற்பாடு செய்யும் வரை தற்காலிகமாக சிறப்பு முகாமில் (அகதி அந்தஸ்து இல்லாது) தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

எப்போதும் போல் சட்ட நடைமுறை தெரியாத சில கட்சியினர் தமிழ்நாடு அரசை குறை கூறி, தங்கள் இருப்பே காட்ட ஆரம்பித்துள்ளனர்' என்று அந்தப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

இந்நிலையில் தற்போது சிறப்பு முகாமில் உள்ள இவர்களை மீண்டும் இலங்கைக்கு அனுப்ப 'க்யூ' பிரிவு பொலிஸார் முயன்று வருகின்றனர்.

எனினும், முருகன் மேல் மற்றொரு வழக்கு இருப்பதால் அவரை இலங்கைக்கு அனுப்ப தாமதமாகும் என்றும் இவ்விவகாரத்தில் முருகனும் ஜெயக்குமாரும் இந்திய குடிமக்களை திருமணம் செய்துள்ளதால், அவர்களுக்கு இந்திய குடியுரிமை கிடைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சமந்தாவின் ஹிட்



தமிழ், தெலுங்கில் சில முன்னணி நடிகைகளுக்கு மட்டும்தான் வசூல் ரீதியாக வரவேற்பு கிடைக்கிறது. தமிழில் தனி கதாநாயகியாக நடித்தாலும் முன்னணியில் இருப்பவர் நயன்தாரா. தெலுங்கில் அப்படி தனி கதாநாயகிகளின் படங்கள் அதிகம் வருவதில்லை.

சமந்தா நடித்து தெலுங்கில் தயாரான 'யசோதா' படம் தமிழிலும் டப்பிங் ஆகி வெளிவந்தது. புதிய கதைக்களம், சமந்தா கதாபாத்திரத்தின் சஸ்பென்ஸ், அவரது நடிப்பு என படம் ரசிகர்களைக் கவர்ந்துள்ள ஒரு படமாக அமைந்துவிட்டது.

தமிழகத்தில் மழை காரணமாக வசூல் பாதிக்கப்பட்டாலும் விமர்சனங்கள் நல்லபடியாகவே வந்துள்ளன. அதே சமயம், ஆந்திரா, தெலுங்கானாவில் படம் குறிப்பிடத்தக்க வசூலைப் பெற்று வருகிறது.

சமந்தா தனி கதாநாயகியாக நடித்த முதல் படமான 'யு டர்ன்' தமிழ், தெலுங்கில் இரு மொழிப் படமாக வெளிவந்தாலும் தோல்வியைத் தழுவியது. அடுத்து அவர் தனி கதாநாயகியாக நடித்து வெளிவந்த தெலுங்குப் படமான 'ஓ பேபி' வசூல் ரீதியாக வெற்றி பெற்றது.

மூன்று வருடங்களுக்குப் பிறகு சமந்தா மீண்டும் தனி கதாநாயகியாக நடித்து வெளிவந்துள்ள 'யசோதா' படமும் வெற்றிப் படமாக அமைய உள்ளது.

திருப்பதி



## புகைப்படக் கலைஞர்களின் கெமராக்கள் பறிமுதல்

திருப்பதி மலையில், தேவஸ்தானத்தின் அனுமதியில்லாமல் புகைப்படம் எடுக்கும் பணியில் ஈடுபட்ட 30 க்கும் மேற்பட்ட புகைப்படக் கலைஞர்களின் கெமராக்களை, தேவஸ்தான அதிகாரிகள் பறிமுதல் செய்து உண்டியல் நிர்வாகிகளிடம் சமர்ப்பித்துள்ளனர்.

குறித்த புகைப்படக் கலைஞர்கள் பக்தர்களுக்குத் தொல்லை கொடுப்பதாக எழுந்த புகாரின் அடிப்படையிலேயே இக் கெமராக்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் ஏழுமலையான் உண்டியலில் சமர்ப்பிக்கப்படும் பொருள், தேவஸ்தானத்திற்கே சொந்தமாகும் என்பதால், ஏலத்தின் மூலம் மாத்திரமே குறித்த கெமராக்களை திரும்ப பெற முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

நொய்டா


## செல்லப் பிராணிகள் வளர்த்தால் 10,000 ரூபாய் அபராதம்



உத்தரப்பிரதேசம் மாநிலம் நொய்டாவில், வரும் ஜனவரி மாதம் 31 ஆம் திகதிக்குள் மக்கள் தமது நாய், பூனை ஆகிய செல்லப்பிராணிகளைப் பதிவு செய்ய வேண்டும் என இந்திய விலங்கு நல வாரியத்தின் நொய்டா பிராந்தியம் அறிவித்துள்ளது.

மேலும் அவ்வாறு பதிவு செய்யாமல் வளர்ப்போருக்கு 10,000 ரூபாய் அபராதம் விதிக்கப்படவுள்ளதாகவும் அதுமட்டுமல்லாது குறிப்பிட்ட காலத்தில் செல்லப் பிராணிகளுக்கு தடுப்பூசி, கருத்தடை சிகிச்சை மேற்கொள்ளவில்லையெனில், மாதந்தோறும் 2,000 ரூபாய் அபராதம் விதிக்கப்படுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

உத்தரபிரதேசம்



## உலகின் மிக நீளமான ஆற்றுக் கப்பல்

ஆற்றில் பயணிக்கக் கூடிய உலகிலேயே மிக நீளமான கப்பல் இந்தியாவில் ஜனவரி மாதம் 10 ஆம் திகதி வெள்ளோட்டம் விடப்படவுள்ளது.

'கங்கா விலாஸ்' என்று பெயரிடப்பட்டுள்ள இக் கப்பலானது உத்தரபிரதேசத்தின் வாரணாசியில் பயணத்தைத் தொடங்கி, கொல்கத்தா தாகா நகரங்கள் வழியாக அசாம் மாநிலத்தின் திப்ருகர் நகரை சென்றடையும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதில் பயணிப்பவர்கள் இந்தியாவின் இயற்கையழகை இரசித்தவாறு செல்வதற்கு ஏற்றது போல வனவிலங்கு சரணாலயங்கள் மற்றும் தேசிய பூங்காக்கள் வழியாக இக்கப்பல் பயணிக்கும்.

குறிப்பாக இப் பயணத்தின் மூலம் 27க்கும் மேற்பட்ட நதிகளையும் 50க்கும் மேற்பட்ட சுற்றுலாத்தலங்களையும் மக்கள் பார்வையிடலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரியானா



## செல்லப் பிராணிகளுக்கு ஆடம்பரத் திருமணம்

அரியானாவில் குருகிராம் நகரில், அண்டை வீடுகளில் வசித்து வருபவர்கள் மணிதா மற்றும் சவிதா.

மணிதா செல்ல பிராணியாக ஷெரு என்ற ஆண் நாயை 8 ஆண்டுகளாக வளர்த்து வருகின்றார்.

அதேபோல் சவிதாவும் ஸ்வீட்டி என்ற பெண் நாயை நீண்டகாலமாக வளர்த்து வருகிறார்.

இந்நிலையில் இவர்கள் இருவரும் தங்களது செல்ல பிராணிகளுக்கு திருமணம் செய்து வைக்க முடிவு செய்துள்ளனர்.

இதன்படி, சுமார் 100 பேருக்கு செல்லப் பிராணிகளின் திருமணத்திற்கு வருமாறு அழைப்பு விடுத்துள்ளனர். இதற்காக 25 திருமண பத்திரிகைகளை அச்சிட்டுள்ளதோடு ஏனையவர்களை ஒன்லை வழியே அழைத்துள்ளனர்.

இதனையடுத்து குறித்த திருமணமானது அண்மையில் கோலாகலமாக நடைபெற்றுள்ளதோடு, இது குறித்த வீடியோவும் இணையத்தில் வைரலாகி வருகின்றது.

இந்நிலையில் இது குறித்து சவிதா கூறும்போது, "நானும் எனது கணவரும் செல்லப் பிராணிகள் வளர்ப்பதில் மிகவும் விரும்பம் உள்ளவர்கள். எங்களுக்கு குழந்தை இல்லை. அதனால், ஸ்வீட்டியை நாங்கள் குழந்தையாக வளர்த்து வருகிறோம்.எனவே ஸ்வீட்டிக்கு திருமணம் செய்து பார்க்க விரும்பினோம்" என்றார்.

இத் திருமணத்தின்போது கொட்டு மேளங்களும் முழங்க, பாரம்பரிய முறைப்படி நாய்களுக்கு மாலை அணிவித்து, சடங்குகள் நடத்தப்பட்டன.



## ஓடிடியில் ஹன்சிகாவின் திருமணம்

நடிகை ஹன்சிகா தனது திருமண நிகழ்வை ஓடிடியில் ஒளிபரப்ப திட்டமிட்டுள்ளதுடன், இதற்கான ஒளிபரப்பு உரிமையை பிரபல தனியார் ஓடிடி நிறுவனம் ஒன்றுக்கு வழங்கி இருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது.

தெலுங்கு படத்தில் கதாநாயகியாக அறிமுகமான ஹன்சிகா, தமிழில் விஜய், தனுஷ், ஜெயம் ரவி, சிம்பு, உதயநிதி ஸ்டாலின் உள்ளிட்ட முன்னணி நட்சத்திரங்களுக்கு ஜோடியாக நடித்துள்ளார்.

இவர் மும்பையைச் சேர்ந்த தொழிலதிபர் சோஹேல் கதுரியாவை திருமணம் செய்ய உள்ளார். இவர்களது திருமணம் டிசெம்பர் 4ஆம் திகதி ராஜஸ்தானின் ஜெய்ப்பூரில் உள்ள முண்டோடா கோட்டை மற்றும் அரண்மனையில் நடைபெற உள்ளதாகச் செய்தி வெளியானது.

தனது தோழி ரங்கி என்பவரின் கணவரான சோஹேல் கதுரியாவைத் தான் ஹன்சிகா திருமணம் செய்து கொள்ள உள்ளார். ரிங்கிக்கும், சோஹேல் கதுரியாவிற்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்டு ஏற்கெனவே பிரிந்து விட்டனர்.

இந்நிலையில், தனது திருமணத்தை ஓடிடியில் ஒளிபரப்பும் உரிமையை பிரபல நிறுவனம் ஒன்றுக்கு வழங்க ஹன்சிகா, சோஹேல் ஜோடி முடிவு செய்து ஒப்பந்தம் நிறைவேறி இருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது.






## வீட்டுலதான் கேட்கணும்

தமிழில், 'தடையறத் தாக்க', 'தீரன் அதிகாரம் ஒன்று', 'தேவ்', 'என்ஜிகே' உள்ளிட்ட படங்களில் நடித்திருப்பவர் ரகுல் ப்ரீத் சிங். இவர், சிவகார்த்திகேயனுடன் நடித்துள்ள 'அயலான்' விரைவில் வெளியாக இருக்கிறது.

கமல்ஹாசனுடன் 'இந்தியன் 2' படத்திலும் நடிக்கிறார். இந்தியிலும் நடித்து வரும் அவர், தயாரிப்பாளர் ஜாக்கி பக்னானியை காதலித்து வருகிறார்.

விரைவில் திருமணம் செய்துகொள்ள இருப்பதாகக் கூறப்படுகிறது. இந்நிலையில், "திருமணம் எப்போது?" என்று அவரிடம் கேட்கப்பட்டது. அதற்குப் பதிலளித்த ரகுல், "அதை எங்க வீட்டுலதான் கேட்கணும். அவங்களும் அதையேதான் கேட்கிறாங்க" என்றார்.

## சிக்கலில் வாரிசு



நேரடி தெலுங்கு படங்களுக்கே பண்டிகை காலங்களில் முன்னுரிமை என்ற தெலுங்கு தயாரிப்பாளர் சங்கத்தின் அறிவிப்பின் காரணமாக விஜய் நடிக்கும் 'வாரிசு' படத்துக்கு சிக்கல் எழுந்துள்ளது.

தெலுங்கு திரைப்பட தயாரிப்பாளர்கள் சங்கம் சார்பில் வெளியிடப்பட்ட அறிக்கையில், "பண்டிகை காலங்களில் நேரடி தெலுங்கு படங்களுக்கு மட்டுமே முன்னுரிமை கொடுக்க வேண்டும்; அந்தப்படங்களுக்கு அளித்தது போக, மீதமிருக்கும் திரையரங்குகளை தெலுங்கில் டப் செய்து வெளியிடப்படும் படங்களுக்கு கொடுக்க வேண்டும் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.



அதன்படி, சங்கராந்தி மற்றும் தசரா பண்டிகைகளில் நேரடி தெலுங்கு படங்களுக்கு மட்டுமே முன்னுரிமை அளிக்க வேண்டும் என்றும், அவைகளுக்குப் போக மீதமிருக்கும் திரையரங்குகளை தெலுங்கில் டப் செய்து வெளியிடப்படும் படங்களுக்கு கொடுக்க வேண்டுமென்றும் தெலுங்கு தயாரிப்பாளர்கள் சங்கம் விநியோகஸ்தர்கள் கேட்டுக்கொண்டுள்ளது.

இந்நிலையில், விஜய் நடிக்கும் 'வாரிசு' திரைப்படம் ஒரே நேரத்தில் தமிழ் மற்றும் தெலுங்கில் வெளியாக உள்ளது. தெலுங்கில் 'வாரசுடு' என்ற பெயரில் வெளியாகும் இந்தப்படம் நேரடித்தமிழ்ப்படம் என இயக்குநர் வம்சி தெரிவித்திருந்த நிலையில், தெலுங்கில் டப் செய்து இந்தப்படம் வெளியாகும் சூழல் உள்ளதால் வாரிசு படத்திற்கு குறைவான திரையரங்குகளே கிடைக்கும் நிலை உருவாகியுள்ளது.

மேலும் வாரிசு படம் வெளியாகும் அதே தினத்தில் 'வீர சிம்ம ரெட்டி' மற்றும் 'வால்டர் வீரய்யா' போன்ற நேரடி தெலுங்கு படங்கள் வெளியாகப்போவதால், வாரிசு படத்தின் வசூலில் பாதிப்பு ஏற்படும் என்று கருதப்படுகிறது.

## இருபதுக்கு 20 போட்டியில்

# அணிகள் பெற்ற பரிசுத்தொகை

அவுஸ்திரேலியாவில் நடைபெற்று, ஞாயிறுக்கிழமையுடன் (13) நிறைவடைந்த இருபதுக்கு 20 உலகக் கிண்ண ஆண்களுக்கான போட்டியில், பாகிஸ்தானை வீழ்த்திய இங்கிலாந்து அணி, உலகக்கிண்ணத்தை இரண்டாவது முறையாக கைப்பற்றியது.

கிரிக்கெட் ரசிகர்கள், முன்னாள் வீரர்கள் உட்பட பலரும் இங்கிலாந்து அணிக்கு தங்களுடைய வாழ்த்துகளை தெரிவித்து வருகின்றனர்.

வெற்றி பெற்ற இங்கிலாந்து அணிக்கு பரிசு தொகையாக 1.72 மில்லியன் அமெரிக்க டொலர் வழங்கப்பட்டுள்ளது.




இறுதிப்போட்டியில் தோல்வி அடைந்த பாகிஸ்தான் அணி 92 இலட்சம் அமெரிக்க டொலர் பரிசாக வழங்கப்பட்டுள்ளது.

### இருபது ஓவர் உலகக்கிண்ண போட்டியில் பங்கு பெற்ற அணிகள் பெற்ற பரிசு தொகை விவரம் வருமாறு:

அரையிறுதி ஆட்டம்
இந்தியா- 560,000 அமெரிக்க டொலர்
நியூஸிலாந்து- 520,000 அமெரிக்க டொலர்
குழு 1 சுப்பர் 12 சுற்று
அவுஸ்திலேரியா- 190,000 அமெரிக்க டொலர்
இலங்கை- 230,000 அமெரிக்க டொலர்
அயர்லாந்து -190,000 அமெரிக்க டொலர்
ஆப்கானிஸ்தான்- 190,000 அமெரிக்க டொலர்
குழு 2 சுப்பர் 12 சுற்று
தென்னாபிரிக்கா- 150,000 அமெரிக்க டொலர்
நெதர்லாந்து- 230,000 அமெரிக்க டொலர்
பங்களாதேஷ்- 150,000 அமெரிக்க டொலர்
சிம்பாபே- 190,000 அமெரிக்க டொலர்
முதலாவது சுற்று
நமீபியா- 80,000 அமெரிக்க டொலர்
ஐக்கிய அமீரகம்- 80,000 அமெரிக்க டொலர்
ஸ்கொட்லாந்து- 80,000 அமெரிக்க டொலர்
மேற்கிந்திய தீவுகள்-80,000 அமெரிக்க டொலர்






## தேசிய கராத்தே சுற்றுப் போட்டியில்

# மெதடிஸ்த மத்திய கல்லூரி மாணவன் சாதனை

கே.எல்.ரி.யுதாஜித்

பாடசாலைகளுக்கு இடையிலான தேசிய மட்ட கராத்தே சுற்றுப் போட்டியில் மட்டக்களப்பு மெதடிஸ்த மத்திய கல்லூரி மாணவன் முருகேந்திரன் குருஷாத் சாதனை படைத்துள்ளார்.

கண்டி மாநகர உள்ளக விளையாட்டு அரங்கில் பாடசாலைகளுக்கு இடையிலான தேசிய மட்ட கராத்தே சுற்றுப் போட்டியில் இடம்பெற்ற மூன்று KATA சுற்று போட்டிகளிலும் அதிகூடிய புள்ளிகளை பெற்று தனது பாடசாலைக்கு தங்கப் பதக்கத்தை பெற்று கொடுத்துள்ளதுடன், மட்டக்களப்பு மாவட்டத்திற்கும் பெருமை சேர்த்துள்ளார்.

அதேவேளை, 2019 இல் இடம்பெற்ற பாடசாலைகளுக்கு இடையிலான தேசிய மட்ட போட்டியிலும் இவர் KATA போட்டியில் வெள்ளிப் பதக்கத்தை பெற்றிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

ஜப்பான் கராத்தே மருயோஷிக்காய் அமைப்பின் கிழக்கு மாகாண போதனாசிரியர் பொறியியலாளர் எஸ். முருகேந்திரன் இவரை பயிற்றுவித்துள்ளதுடன், மட்டக்களப்பு வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் வா.லவக்குமார் மற்றும் பாடசாலை அதிபர் இ.பாஸ்கரன், பாடசாலை உடற்கல்வி ஆசிரியர் மற்றும் பாடசாலை சமூகம் ஆகியோர் மாணவனை பாராட்டியுள்ளனர்.

# துலானி மாயம்

தென்கொரியாவுக்கு சென்றிருந்த இலங்கை மகளிர் ரக்பி அணியின் தலைவி துலானி பல்லேகொண்டகே நேற்று (14) காணாமல் போயுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

எழுவர் கொண்ட ரக்பி போட்டியில் பங்கேற்பதற்காக அங்கு சென்றிருந்த அவர், ஞாயிற்றுக்கிழமை (13) இடம்பெற்ற போட்டியில் கலந்து கொண்ட பின்னர் காணாமல் போயுள்ளார் என கூறப்படுகின்றது.

தனது அணியைச் சேர்ந்த ஒருவர் காணாமல் போனமை தொடர்பில் கொரிய ரக்பி சங்க அதிகாரிகள் ஊடாக, இலங்கை ரக்பி அணியின் முகாமையாளர் அந்நாட்டு பொலிஸாருக்கு அறிவித்துள்ளார். இதனையடுத்து, அந்நாட்டு பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.





# விளையாட்டுத்துறையை மேம்படுத்த சந்திப்பு

இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லேயை, விளையாட்டுத்துறை அமைச்சர் ரொசான் ரணசிங்க, கொழும்பில் உள்ள இந்திய இல்லத்தில் வைத்து சந்தித்தார்.

இந்தச் சந்திப்பின் போது, இலங்கை, இந்திய வீரர்களிடையே விளையாட்டுத்துறையை மேம்படுத்துவதற்காக, இந்தியாவின் ஒத்துழைப்பை பெற்றுக்கொள்வது குறித்து அமைச்சர் ரணசிங்க, இந்திய உயர்ஸ்தானிகருக்கு விளக்கமளித்துள்ளார்.

# கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டி



தேசிய, சர்வதேச மெய்வல்லுநர் போட்டிகளில் இலங்கைக்கு பதக்கங்களை வென்று கொடுத்த மணிவேல் சத்தியசீலனின் ஏற்பாட்டில் வெள்ளிக்கிழமை (11) முதல் ஞாயிற்றுக்கிழமை (13) வரையிலும், உடபுஸ்ஸலாவ எமஸ்ட் தோட்ட ஜெட்லைன் இளைஞர் கழக விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டியில் பங்கேற்றிருந்த அணிகளில் இரண்டு அணிகளையும் பார்வையாளர்களையும் படங்களில் காணலாம்.

ஆ.ரமேஸ்






உக்ரேன்

# கண்ணீரால் வரவேற்கும் மக்கள்

ரஷ்யாவுக்கும் உக்ரேனுக்கும் இடையே கடந்த 8 மாதங்களுக்கு மேலாகப் போர் இடம்பெற்று வருகின்றது.

இப்போரில் உக்ரேனின் பெரும்பாலான பகுதிகளை ரஷ்யப் படைகள் கைப்பற்றியுள்ள நிலையில், கைப்பற்றிய பகுதிகளை ரஷ்ய அரசு தம்முடன் அண்மைக்காலமாக இணைத்து வருகின்றது.

அதுமட்டுமல்லாது உக்ரேனின் கெர்சோன் நகருக்குள் புகுந்த ரஷ்ய இராணுவத்தினர், அங்குள்ள வீடுகளை ஆக்ரமித்துடன் பொருட்களை கொள்ளை அடிப்பதாகவும், பொதுமக்களை காலி செய்யுமாறு உத்தரவிட்டு வருவதாகவும் உக்ரேன் குற்றம் சாட்டி இருந்தது.





ரஷ்யாவின் இச் செயல் சர்வதேச சட்டத்தை மீறும் செயலாக உள்ளது என உலக நாடுகள் கண்டனம் தெரிவித்திருந்தன.

இதனையடுத்து கெர்சோனை விட்டு தமது படைகளை வெளியேறுமாறு ரஷ்ய அரசு அண்மையில் உத்தரவிட்டதைத் தொடர்ந்து ரஷ்யப் படைகள் வெளியேறின.

இதனால் மகிழ்ச்சியடைந்த மக்கள் கடந்த சிலநாள்களாக அதிகளவில் அங்கு வருகை தந்தவண்ணம் உள்ளனர்.

இந்நிலையில் அப்பகுதிக்கு வந்த உக்ரேன் இராணுவ வீரர்களை, அப்பகுதி மக்கள் கட்டி அணைத்தும், பூங்கொத்து கொடுத்தும் கண்ணீர் மல்க வரவேற்றுள்ளமை நெகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

அவுஸ்திரேலியா



# 24 மணி நேரம்: 78 மதுபான விடுதி; விநோத உலக சாதனை

ஒரு குறிப்பிட்ட நேரத்தில், பல தரபட்ட மதுபான விடுதிகளுக்கு அடுத்தடுத்து சென்று அங்கு மதுபானம் அருந்தும் நிகழ்வானது 'Pub Crawl' என அழைக்கப்படுகின்றது.

அந்தவகையில் அண்மையில் 24 மணி நேரத்தில், 78 மதுபான விடுதிகளில் மது அருந்தி ஹென்ரிக் டீ வில்லியர்ஸ் என்ற அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த நபர் உலக சாதனை படைத்துள்ளார்.

இது குறித்து ஹென்ரிக் டீ வில்லியர்ஸ் கூறுகையில், "கின்னஸ் உலக சாதனைகளின் விதிமுறைகள் படி ஓர் இடத்தில், 125 மில்லி லீற்றர் மதுவைத்தான் நான் குடித்தேன்.

எவ்வாறு இருப்பினும் இம் முயற்சியானது என்னை மிகவும் சோர்வடைய செய்துள்ளது.

இச் சாதனையைப் படைக்க முறையான திட்டமிடல் அவசியம். அந்தவகையில் இச்சாதனை முயற்சிக்கு எனக்கு உதவி புரிந்த எனது சகோதரர் மற்றும் நண்பர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்" என்றார்.

இதற்கு முன்னர் 24 மணி நேரத்தில் 67 விடுதிகளில் மது அருந்திய நபர் என்ற சாதனையைப் பிரித்தானியாவைச் சேர்ந்த நேதன் க்ரிம்ப் என்பவர் படைத்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.






அமெரிக்கா

# டுவிட்டரில் ப்ளூ டிக் பெற்ற இயேசு

பிரபல சமூக வலைத்தளமான டுவிட்டரை கைப்பற்றியுள்ள டெஸ்லா, ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனங்களின் ஸ்தாபகர் எலோன் மஸ்க் அண்மைக்காலமாக டுவிட்டரில் பல மாற்றங்களை செய்து வருகின்றார்.

குறிப்பாக டுவிட்டரில் அதிகாரபூர்வக் கணக்குகளுக்கு வழங்கப்படும் 'நீல வண்ண டிக் குறியீட்டினை' (ப்ளூ டிக் ) ஏனையவர்களும் பயன்படுத்த மாதம் 8 டொலர் வசூலிக்கும் திட்டத்தினையும் அமல்படுத்தினார்.


இதனைத் தொடர்ந்து ஏராளமான கணக்குகள் கட்டணம் செலுத்தி நீல வண்ணக் குறியீடுகளைப் பெற்றன. அதே சமயத்தில் ஏராளமான போலிக் கணக்குகளும் டிக் குறியீட்டினைப் பெற்றுள்ளன.

இது இவ்வாறு இருக்க இயேசு கிறிஸ்துவின் பெயரில் தொடங்கப்பட்ட டுவிட்டர் கணக்கொன்றுக்கு ப்ளூ டிக் வழங்கப்பட்டுள்ள சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

குறித்த டுவிட்டரில் கணக்கின் பயோவில் (Bio), தான் ஒரு 'தச்சர், ஹீலர் மற்றும் கடவுள்' எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இக்கணக்கினைப் 783.2k பின்தொடர்கின்றனர்.

இக்கணக்கில் வேடிக்கையான டுவிட்கள், பகிரப்பட்டு வருகின்றன. மேலும் 2006ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட இக்கணக்கிற்கு டுவிட்டர் நிறுவனம் தற்போது ப்ளூ டிக்கை கொடுத்துள்ளமை மக்கள் மத்தியில் விமர்சனத்தை ஏற்படுத்தியுள்ளது. இந்நிலையில் போலிக் கணக்குகள் அதிகரித்துள்ளதால் குறித்த ப்ளூ டிக் அம்சத்தினை தற்காலிகமாக டுவிட்டர் நிறுவனம் நிறுத்தி வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

பல்கேரியா



# உலகின் மிகப்பெரிய உதடுகள் வேண்டும்

## யுவதியின் விநோத ஆசை

பல்கேரியாவைச் சேர்ந்தவர் ஆண்ட்ரியா இவனோவா. இவர், "உலகின் மிகப் பெரிய உதடுகளாக தனது உதடுகளை மாற்ற வேண்டும்" என விரும்பியுள்ளார். இதற்காக இதுவரை 32 முறை உதடுகளின் அளவை பம்ப் செய்து அவற்றை பெரிதாக மாற்றியுள்ளார்.

மேலும் இதற்காக இலங்கை மதிப்பில் சுமார் 35 இலட்சம் ரூபாய் செலவு செய்துள்ளார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து அவர் கருத்துத் தெரிவிக்கையில் "என் உதடுகளைப் பெரிதாக்குவதன் மூலம் புதிய உலக சாதனை படைக்க விரும்புகின்றேன்.

இதனால் இரண்டு வாரங்களுக்கு ஒருமுறை ஹைலூரோனிக் அமில ஊசி செலுத்தி வருகின்றேன்" என்றார்.

பிரான்ஸ்





# விமான நிலையத்தில் 18 ஆண்டுகள் வாழ்ந்த நபர் மரணம்

2004 ஆம் ஆண்டு ஸ்டீவன் ஸ்பீல்பர்க் என்ற உலகப் புகழ்பெற்ற ஹொலிவுட் இயக்குநர் 'தி டெர்மினல்' என்கிற படத்தை இயக்கி வெளியிட்டார்.

இத்திரைப்படத்தில் பழம்பெரும் நடிகர் டாம் ஹாங்க்ஸ் நடித்திருந்தார்.

உலகளவில் மக்கள் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்ற இத்திரைப்படமானது உருவாவதற்கு அடிப்படையாக இருந்தவர் ஈரான் நாட்டைச் சேர்ந்த மெஹ்ரன் கரிமே நசீரி.

ஈரானைச் சேர்ந்த தந்தைக்கும், ஸ்காட்லாந்தை சேர்ந்த செவிலியருக்கும் பிறந்த அவர் தனது தாயைத் தேடிக் கண்டுபிடிக்க விரும்பினார். இதனால் பலமுறை கப்பல் மூலம் பிரித்தானியாவுக்குள் நுழைய முயற்சி செய்தார்.

எனினும் போதிய ஆதாரங்கள் இல்லாததால் ஒவ்வொரு முறையும் பிரித்தானியாவால் தடுத்து நிறுத்தப்பட்டு பெல்ஜியத்திற்கும் பிரான்ஸிற்கும் திருப்பி அனுப்பப்பட்டார்.

ஒரு கட்டத்தில் பிரித்தானியாவில் உள்ள தன் தாயைத் தேடும் பணியை கைவிட்டு, பாரிஸ் நகரில் உள்ள சார்லஸ் டி கலே விமான நிலையத்திலேயே வசிக்க தொடங்கினார்.

மேலும் தனது ஈரானிய பாரம்பரிய அடையாளங்களை துறந்த மெஹ்ரன் கரிமே நசீரி, தன்னை ஒரு பிரித்தானிய குடிமகனாகவே கருதினார்.

இதையடுத்து பிரான்ஸ் மற்றும் பெல்ஜியம் அவருக்கு குடியுரிமை வழங்க முன்வந்த போதும் அதனை அவர் ஏற்க மறுத்தார்.

மேலும் தன் வாழ்நாளில் பெரும்பாலான நேரத்தை குறித்த விமான நிலையத்திலேயே கழித்த மெஹ்ரன் கரிமே நசீரி, அவ்வப் போது விமான நிலைய அதிகாரிகளிடமிருந்து உணவுக் கூப்பன்களைப் பெற்று உணவருந்தி வந்துள்ளார்.

இந்நிலையில் கடந்த 12 ஆம் திகதி மாரடைப்பு காரணமாக கரிமே நசீரி உயிரிழந்துவிட்டார் என விமான நிலைய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அவரது மரணம் பாரிஸ் மக்கள் மத்தியில் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் செவ்வாய்க்கிழமை, 15 நவம்பர் 2022, இல. 08, ஹுணுபிட்டி குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.